# மூன்று
# நகைச்சுவை நாடகங்கள்

நாடகப் பேராசிரியர்

**ப. சம்பந்த முதலியார்,** பி. ஏ. பி. எல்

*அவர்களால் இயற்றப்பட்டது*

**இவர் எழுதிய மற்ற நூல்கள்**

லீலாவதி - சுலோசனை, சாரங்கதரன், மகபதி, காதலர் கண்கள், நற்குல தெய்வம், மனோஹரன், ஊர்வசியின் சாபம் இடைச்சுவர் இருபுறமும், என்ன நேர்ந்திடினும், விஜயரங்கம், தாசிப்பெண், மெய்க்காதல், பொன்விலங்குகள், சிம்ஹளநாதன், விரும்பிய விதமே, சிறுத்தொண்டர், காலவரிஷி, ரஜபுத்ரவீரன், உண்மையான சகோதரன், சதி—சுலோசனா, புஷ்பவல்லி, உத்தம பத்தினி, அமலாதித்யன், கள்வர்தலைவன், சபாபதி முதற்பாகம், பொங்கல் பண்டிகை அல்லது சபாபதி இரண்டாம் பாகம், ஓர் ஒத்திகை அல்லது சபாபதி மூன்றாம் பாகம், சபாபதி நான்காம் பாகம், பேயல்ல பெண்மணியே, புத்த அவதாரம், விச்சுவின் மனைவி, வேதாள உலகம், மனைவியால் மீண்டவன், சந்திரஹரி, சுபத்ரார்ஜுனா, கொடையாளி கர்ணன், சஹதேவன் சூழ்ச்சி, நோக்கத்தின் குறிப்பு, இரண்டு ஆத்மாக்கள், சர்ஜன் ஜெனரல் விதித்த மருந்து, மாளவிகாக்னிமித்ரம், விபரீதமான முடிவு, சுல்தான் பேட்டை சப் அஸிஸ்டென்ட் மாஜிஸ்டிரேட், சகுந்தலை, காளப்பன் கள்ளத்தனம், முற்பகல் செய்யின் பிற்பகல், விளையும், நாடகமேடை நினைவுகள் - ஆறுபாகங்கள், நாடகத்தமிழ், யயாதி, பிராமணனும் சூத்திரனும், வாணீபுர வணிகன், இரண்டு நண்பர்கள், சத்ருஜித், ஹரிச்சந்திரன், மார்க்கண்டேயர், ரத்னாவளி, கண்டுபிடித்தல், கோனேரி அரச குமாரன், சந்தையிற் கூட்டம், வைகுண்ட வைத்தியர், தீட்சிதர் கதைகள், ஹாஸ்யக் கதைகள், குறமகள், நல்லதங்காள், சிறுகதைகள், நடிப்புக் கலையில் தேர்ச்சி பெறுவதெப்படி? ஹாஸ்ய வியாசங்கள், தமிழ் பேசும் படக் காக்ஷி, விடுதிப் புஷ்பங்கள், பேசும்பட அனுபவங்கள், வள்ளி மணம், கதம்பம், மாண்டவர் மீண்டது, ஆஸ்தானபுர நாடக சபை சங்கீதப் பயித்தியம், ஒன்பது குட்டி நாடகங்கள், சபாபதி ஜமீந்தார் சிவாலயங்கள் இந்தியாவிலும் அப்பாலும்--ஐந்துபாகங்கள், சிவாலய சிற்பங்கள், சதி சக்தி, மனை ஆட்சி, இந்தியனும் ஹிட்லரும், தீபாவளி வரிசை, காலக் குறிப்புகள், சுப்ரமண்ய ஆலயம், தீயின் சிறு திவலை, கலையோ காதலோ, உணவுப் பொருள்கள் சபாபதி துவிபாஷி, சபாபதி துணுக்குகள், இல்லறமும் துறவறமும்.

கிடைக்குமிடம் :

P, சம்பந்த முதலியார் B.A., B.L., திவான்

13 [illegible]. ஆச்சாரப்பன் தெரு, சென்னை—1.

காபி ரைட்)      1 9 5 6      விலை ரூபா 2.00

என் தந்தை—தாயார்

## ப. விஜயரங்க முதலியார்
## ப. மாணிக்கவேலு அம்மாள்

ஞாபகார்த்தமாக இந்நூல் சமர்ப்பிக்கப்பட்டது

# முன்னுரை

இப் புஸ்தகத்தில் "மாண்டவர் மீண்டது" "ஆஸ்தானபுர நாடக சபை" (ஷேக்ஸ்பியர் நாடகத்தின்றும் எடுக்கப் பட்டது) "சங்கீதப் பயித்தியம்" எனும் மூன்று நகைச்சுவை நாடங்கள் அடங்கியிருக்கின்றன. இவைகளையாவது, அல்லது நான் எழுதி இருக்கும் மற்றெந்த நாடங்களையாவது, ஆட விரும்புவோர், எனக்குச் சேரவேண்டிய ராயல்டி கட்டணத் தைக் கட்டி, என் உத்திரவு பெற்ற பிறகே ஆட வேண்டும். இல்லா விட்டால் காபிரைட் சட்டப் பிரகாரம், போலீஸ் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

5—12—40
சென்னை,
70 ஆச்சாரப்பன் தெரு

ப. சம்பந்தம்.

---

## பிழை — திருத்தம்

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 6 | 8 | எள்விதி | என்விதி |
| 37 | 10 | கழுப்பதற்கு | கழிப்பதற்கு |
| 38 | 31 | இகை | இதை |

# மாண்டவர் மீண்டது

## நாடக பாத்திரங்கள்

| | | |
|---|---|---|
| பீமராஜன் | .... .... | *ஓர் சிற்றரசன்* |
| ஆநந்தன் | .... ... | *அரண்மனை விதூஷகர்கள்* |
| பிரம்மாநந்தன் | | |
| வீரபத்திரன் | .... .... | *பீமராஜன் வேலையாள்* |
| மஹாராணி | .... .... | *பீமராஜன் மனைவி* |
| ரஞ்சிதம் | .... .... | *மஹாராணியின் வேலைக்காரி* |

# மாண்டவர் மீண்டது

## முதல் அங்கம்

### முதற் காட்சி

*இடம்—ஆனந்தன் வீட்டில் ஓர் அறை.*

**ஆனந்தனும் பிரம்மாநந்தனும் பேசிக்கொண்டு வருகிறார்கள்.**

**ஆ.** அடே தம்பி! இந்தக் கஷ்டத்துக்கு என்னடா செய்யரது அத்தையம்மாளெ கேட்டா, கல்யாண செலவுக்கு நூறு பொன் கொண்டு வந்தாதான் எம் பொண்ணே கண்ணாலம் பண்ணிக் கொடுக்க முடியும் இண்ணு கண்டிப்பா சொல்லி வுட்டாங்கடா இண்ணைக்கி. நானு எவ்வளவோ சொல்லி பாத்தேன், கொஞ்சம் கொறைச்சிக்கிங்க இண்ணு, கேக்க மாட்டேண்ராங்கடா; நீ பொன்னே குறைச்சா நானு பொண்ணெ குறைச்சுடரேன் இண்ணுங்க!

**பி.** அது என்னமா அண்ணு பொண்ணெ குறைக்கிறது?

**ஆ.** உம்—அதையும் கேட்டு பாத்தேன். நீ நானு கேக்ரத்துலே பாதி பொன்னு கொடுத்தா, நானும் எம் பொண்லே பாதி பொண் கொடுக்கிறேன் இண்ராங்க—நமக்கு மேலே இருக்கராங்கடா அவுங்க;

**பி.** நம்ம அத்தெ அல்லா!

**ஆ.** அதிருக்கட்டுண்டா—இப்பொ இந்த கஷ்டத்துக்கு என்னடா செய்யரது? எனக்கோ வயசாயி போச்சி: எத்தனி நாளு கண்ணாலம் இல்லாதே இருக்கிறது? கண்ணாலம் சீக்கிரம் ஆவணுமிண்ணு சொன்னுகா, நூறு பொன்னு சீக்கிரம் கொண்டா இண்ராங்க!

இந்த கஷ்ட காலத்திலே இப்பொ நூறு பொன்னுக்கு எங்கே போரது? மானமோ காய்ஞ்சி போச்சி, துளி மழெயே காணோம்! ராஜா என்னடா இண்ணு, சண்டைக் கோசரம் பணம் வோணும் இண்ணு வரியெல்லாம் ஒஸ்த்திவுட்டாரு!

பி. ராஜாவே போய் கேட்டு பாரேன் அண்ணு, கலியாணத்துக்கு செலவுக்கு வோணும் இண்ணு.

ஆ. அது பிரயோஜனமில்லே! அல்லாம் நேத்து கேட்டு பாத்தேன்! இதுக்குள்ள என்னடா உனக்கு கல்யாணம், அல்லாம் எம்பிள்ளெக்கி கலியாணம் ஆவும் போது உனக்கும் என் செலவிலே கல்யாணம் பண்ணி வைக்கிறேன் இண்ராரு! ராஜா பிள்ளை தான் ஒனக்கு தெரியுமே — சின்ன பிள்ளே — அவருக்கு கலியாணமாகரத்துக்கு இன்னும் எத்தனி வருஷமாகுமோ! அதுக்குள்ள எனக்கு கருமாந்திரமாயி பூடும் போலே இருக்குது!

பி. அண்ணு! எனக்கொரு நல்ல யுக்தி தோணுது அண்ணு!

ஆ. என்னடா அது? சொல்லு பார்ப்போம்.

பி. உங்களுக்கு கருமாந்திரம் செலவுக்கு பொன் வோணும் இண்ணு நூறு பொன் கேட்டுப்பாருங்களே!

ஆ. குட்டடா அவனே!—புத்திசாலி! எனக்கு கருமாந்திரம் ஆவணும், அதுக்கு பொன்னு ஒணும், இண்ணு நானே என்னமாடா கேக்கரது?

பி. அது ஒரு கஷ்டம் இருக்குது வாஸ்தவம்தான்—ஆனா நானுசொல்ரத்தே கேளுங்க—நானு செத்து பூட்டேன் இண்ணு, ராஜாகிட்டபோயி, ரொம்ப அழுரமாதிரி அழுது, கருமாந்திர செலவுக்காக இண்ணு, நூறு பொன் வாங்கி வந்துடுங்க—அப்பரம் பாத்துக்கலாம்.

ஆ. ஆமாண்டா தம்பி! நல்ல யுக்திதான் இது! அப்பொ நானு உடனே போய் ராஜாவே கேக்கட்டுமா?

பீ. போய் வாங்க!—அண்ணு—இன்னொரு சின்ன சமாசாரம்,

ஆ. என்னு சீக்கிரம் சொல்லு.

பி. உங்க கல்யாணத்தோடே எனக்கும் அப்படியே ஒரு கல்யாணம் பண்ணி வுடுங்களேன் அண்ணு ?

ஆ. குட்டுடா அவனே !—என் கல்யாணத்துக்கே வழியே காணேம்—இதுக்குள்ள உனக்கென்னுடா கல்யாணம் ?

பி. இல்லே அண்ணு உங்க கல்யாணத்தோடே எனக்கும் ஒண்ணு பண்ணிவுட்டா, செலவு சுலபமா பூடுமே இண்ணு பாக்கரேன்.

ஆ. அமாண்டா, பொண்ணு எங்கேடா மொதல்லே ?

பி. நம்ப அத்தைக்கு இரண்டாவது பொண்ணு இருக்குதே அண்ணு, அதுக்குக்கூட வயசாயி இருக்குது அண்ணு.

ஆ. கெட்டிக்காரன் ! எல்லாம் விசாரிச்சி வைச்சிருக்கிரையா !—ஆமாண்டா அவுங்க அந்த பொண்ணெ உனக்குக் கொடுக்க ஒப்புக்கணுமே ?

பி. அண்ணு—நானு நேத்து மொள்ளபோய் கேட்டு பாத்தே—நம்ப அத்தெதானே இண்ணு—

ஆ. குட்டுடா அவனெ !—ஏண்டா இதுக்குள்ள இந்த யுக்தி பண்ணேயா ?—அதிருக்கட்டும், அவுங்க என்னு பதில் சொன்னுங்க?

பி. பெரிய பொண்ணு இருக்கும்போது சின்ன பொண்ணுக்கு என்னமா கண்ணுல மாகரது அப்பா, பெரிய பொண்ணுக்கு கண்ணுலம் ஆகட்டும், அப்புறம் பாத்துகலாம் இண்ணுங்க.

ஆ. ஆமாம் கல்யாண செலவுக்கு என்னமாரு கேட்டாங்களா ?

பி. என்னேயும் நூறு பொன் கேட்டாங்க-எல்லாம் பேரம் பண்ணி அம்பது பொன்னுக்கு தீர்மானம் பண்ணி வைச்சிருக்கிறேன் !

ஆ. ஏண்டா இதெல்லாம் எங்கிட்ட சொல்லாதே என் கதையெல்லாம் முன்னே கேட்டுகனேயோ? குட்டுடா இவனே !

பீ. இல்லே அண்ணு, எப்பவும் அண்ணுத்தெ சமாசாரம் மொதல்லே, தம்பி சமாசாரம் பின்னுலே.

ஆ. சரிதாண்டா தம்பி, நீ ரொம்ப புத்திசாலிதான்—நீ ஊட்டுலேயே இரு, நானு போய் ராஜாகிட்ட நீ சொன்னமாதிரி சொல்லி நூறு பொன்னு முன்னே வாங்கிகினு வந்தூடரேன்.

பீ. கொஞ்சம் இருங்க அண்ணு—எனக்கு இன்னொரு யுக்தி தோணுது—ராஜாவும் ராஜாத்தியும் தனித் தனியா யிருக்கர சமயம் பாத்து, நீங்க ராஜாகிட்ட போய், நானு சொன்னமாதிரி கேளுங்க—நானு ராஜாத்திகிட்டபோயி பொன்னு கேட்டு வாங்கி வந்தூடரேன்.

ஆ. நல்லயுக்திதான் ஆனுல்—குட்டுடா அவனே! நீ என்ன மாடா நீ செத்து பூட்டே இண்ணு செலவுக்கு கேப்பே?

பீ. இல்லெ அண்ணு—இதுகூடவா உங்களுக்கு சொல்லணும்! நானு ராஜாத்திகிட்ட நீங்க செத்து பூட்டைங்க இண்ணு சொல்லி பொன்னு கேட்டு வாங்கிவர்ரேன்!

ஆ. அடே தம்பி! நீ தாண்டா கெட்டிக்காரன்! நீ என்னே குட்டு சொல்ரேன்—நானு பட்டுகிரேன்.

பீ. வேணும் அண்ணு, என்னுண்ணுலும் நீங்க பெரியவங்க—சீக்கிரம் பொறப்படுங்க!—நீங்க அரண்மனைக்கு முன்புரமா ஜல்தியா போங்க, நானு பின்பக்கமா ராஜாத்தி இருக்கிற அந்தப்புரத்துக்கு போரேன்.

[போகிருர்கள்]

**காட்சி முடிகிறது.**

---

## இரண்டாவது காட்சி

**இடம்—**அரண்மனையில் ராஜாவின் அறை.

**பீமராஜன்** வேலையாளுடன் பேசிக்கொண்டிருக்கிருர்.

பீ. ஏண்டா வீரபத்திரா, உங்களில் ஒரு கல்யாணம் பண்ணுவதென்ருல் எவ்வளவு செலவு பிடிக்கும்?

வீ. கொறைஞ்ச பட்சம் 25 பொன்னுவது பிடிக்குங்க-

பீ. அப்படி யிருக்கும்போது, நமது அரண்மனை விதூஷகன், தன் கல்யாணத்திற்கு அதிகமாகக் கேட்கிருனே.

வீ. தாராளமா—சம்பிரமாபண்ரதாரு, 50 பொன்னுவது பிடிக்காதுங்களா ?

பீ. அவன் நூறு பொன் வேண்டு மென்கிருனடா.

வீ. மஹாராஜா அரண்மனையில் உத்யோகஸ்தனுயிருந்து, அந்த அந்தஸ்துக்கு தகுந்தாப் போலே செலவு பண்ணணும், இண்ணு கேட்கராப் போலே இருக்குது.

பீ. அவன் நிரம்ப செலவாளீ என்று நினைக்கிறேன்.

வீ. அது வாஸ்தவம் தானுங்க—அதிகமாகத்தான் செலவழிக்கிருன், கண்ணு மண்ணு தெரியாதே.

பீ ஆனுலும் சில விஷயங்களிலே மாத்திரம் சிக்கனமாகத் தான் இருக்கிருன்,

வீ. மஹாராஜா சொல்வது என்னமோ வாஸ்தவம், தன் சொந்த விஷயங்களிலே ரொம்ப சிக்கினம்; ஒரு காசு செலவழிக்க மாட்டான்—ஆ! இதோ வர்ரானுங்க அழுதுகினே !

**ஆனந்தன் அழுதுக்கொண்டேவந்து பீமராஜன் காலில் விழுகிருன்.**

ஆ. மஹாராஜா ? மஹாராஜா ! [அழுகிருன்]

பீ. என்னடாப்பா! என்ன சமாச்சாரம் ? ஏன் அழுகிருய்?

ஆ. மஹாராஜா ! நானு என்ன சொல்லப்போரேங்க—என் தம்பி—தம்பி ! [அழுகிருன்]

பீ. என்ன உன் தம்பிக்கு ?

ஆ. [அழுதுக் கொண்டே] பதினெட்டு வருஷமாக என் கண்ணெப் போல வளர்த்தேனுங்க ! கூட பிறந்த தம்பி ! [தேம்பி அழுகிருன்]

பீ. ஐயோ பாவம் !

ஆ. ரொம்ப புத்திசாலிங்க ! ரொம்ப கெட்டிக்காரன் ? என் வார்த்தைக்கு ஒரு பேச்சு குறுக்க பேசமாட்டா

னுங்க! அவனைப் போலே இந்த உலகத்துலே இன்னொரு தம்பி ஆப்படராது கஷ்டங்க! [தேம்பி அழுகிருன்.]

பீ. பாவம்! என்ன உடம்பு?

ஆ, நானு என்னுண்ணு சொல்லப்போரேன்! மூணே மூணு நாள் காய்ச்சல்! நேத்து ராத்திரிகூட சாப்பாடு சாப்பிட்டானுங்க! எனக்கு கண்ணாலம் ஆவும்போது அவனுக்கும் ஒரு கண்ணாலம் பண்ண யோசிச்சிகினு இருந்தேன்! என் விதி என்விதி! இப்படியாச்சி என் கதி! [தேம்பி அழுகிருன்]

பீ. [பெருமூச்செறிந்து] உம்! விசனத்தை அடக்கிக் கொள் இனி விசனப்பட்டென்ன பலன்? உலகம் இப்படியிருக்குது! இதற்கு நாம் என்ன செய்யலாம்? உம்— இந்த கர்மங்களுக்கெல்லாம் உங்களவர்களில் என்ன பிடிக்கும்?

ஆ. மஹாராஜா என்கையிலே இப்போ ஒரு காசுமில்லெ! [அழுகிருன்.]

பீ. அதற்காக நீ துக்கப்படவேண்டாம் வேண்டிய செலவிற்கெல்லாம் நான் தருகிறேன். நேர்ந்து விட்டது அகஸ்மாத்தாய் — இதற்கு என்ன செய்யலாம்! ஸ்வாமியை நம்பி தைரியமாயிரு—எவ்வளவு வேண்டுமுனக்கு?

ஆ. மஹாராஜா ஒரு நூறு பொன்னுவது வேண்டும்.

பீ. நூறு பொன் எதற்காகடா? கலியாணத்திற்குதான் நூறு பொன் கேட்டாய்,

ஆ. மஹாராஜா கலியாணத்தைவிட இதற்கு அதிகமாகப் பிடிக்கும். கலியாணத்திற்காவது 4 நாள் எங்கள் பந்துக்களுக்கெல்லாம் சாப்பாடு போடவேண்டும். இதற்கு 10 நாள் சாப்பாடு போடவேண்டும். உங்களால்தான் இந்த காரியம் முடியவேண்டும் [அழுகிருன்] எப்படியாவது நூறு பொன் தயவு பண்ணவேண்டும், மந்திரியவர்களுக்கு நூறு பொன் உடனே கொடுக்கும்படி உத்தரவாக வேண்டும்—தம்பி! தம்பி!

பீ. அப்படியே ஆகட்டும். [ஒரு ஓலையில் எழுதிக்கொடுக்கிறார்]

ஆ. மஹாராஜா, காரியம் எல்லாம் ஆனவுடனே வந்து பாக்கரேன் அது வரைக்கும் கொஞ்சம் ரஜா கொடுக்கணும்; நான் வருகிறேன்,—தம்பி! தம்பி! [போகிறான்.]

பீ. பாவம்? தம்பிக்காக நிரம்ப துக்கப்படுகிறான்.

வீ. ஆமாங்க ரொம்ப அழுதான்.

பீ. ஆனாலும் கொஞ்சநாளைக்கு முன்னே அவன் அதன பிரசங்கியா யிருக்கிறான், நான் ஏதாவது சொன்னால் அதற்குமேலே பேசுகிறான், என்று சொன்னானே.

வீ. அதென்னமோ உண்மைதானுங்க; அந்த பயலே எனக்குக்கூட தெரியும்—அதனபிரசங்கி— என்நேரமும் ஏதாவது குட்ரயுக்தி பண்ணிக்கினே யிருப்பான்- அண்ணனுக்கு மேலே அவன்!

பீ. ஆனாலும்—பாவம்! என்னமோ சிறு வயதிலே பூட்டான்.

வீ. பாவம்! என்னமோ சிறுவயதுதான்—இன்னும் கலியாணம்கூட ஆகலே.

பீ. ஆமாம், கர்மாந்திரத்திற்கெல்லாம் நூறு பொன் எதற்காகடா?

வீ. ஆமாங்க, அது அவன் கேட்டது அதிகம்தான்; மஹாராஜா கொடுக்கரதெ நானு தடுக்கக்கூடாது இண்ணு சும்மா இருந்துட்டேன்.

பீ. ஆனாலும் நம்முடைய அரண்மனை விதூஷகன் பார், அவன் வீட்டில் ஏதாவது காரியம் நடந்தால், அந்த அந்தஸ்திற்கு தக்கபடி அவன் செலவழிக்க வேண்டாமா?

வீ. அதுக்கு என்ன சந்தேகங்கள்! அவன் அப்புறம் சரியாக செலவழிக்காப்போனா அது நம்ப மஹாராஜாவின் சமஸ்தானத்துக்கல்லவா பேச்சாகும்—

பீ, வீரபத்ரா—நான் அங்குபோவது—முடியாது—நீயே எல்லா காரியமும் சரியாய் நடக்கிறதா என்று பார்த்துவிட்டுவா.

வீ. உத்திரவு மஹாராஜா. [போகிறான்.]

காட்சி முடிகிறது.

## மூன்றுவது காட்சி

இடம்—அந்தப்புறம்.

மஹாராணி வேலைக்காரி ரஞ்சிதத்துடன் பேசிக் கொண்டிருக்கிறுள்.

ம. ஏண்டி ரஞ்சிதம், உன் பெண்ணுக்கு சீக்கிரம் கலியாணம் ஆகப்போகிறது என்றுயே—எப்பொழுது கலியாணம்!

ர. உம்—உம். அந்த கலியாணம் எல்லாம் பழுத்துப் போச்சம்மா! நம்ப அரமனெ விதூஷகன் ஆநந்தனுக்குத்தான் கட்டிக் கொடுக்கலாமிண்ணு இருந்தேன்; அல்லாம் ஆவட்டும் ஆவட்டும் யோசிக்கிறேன் இண்ணு சொல்லிகினு இருந்து, கடைசியிலே அவுங்க அத்தெ பொண்ணெ கண்ணுலம் பண்ணிக்கபோரேன் இண்ணு, நேத்து சொல்லி விட்டான் அம்மா! இந்த விதூஷகனுங்களே மாத்திரம் நம்பக்கூடாதம்மா. அவுங்க பேசரது, என்னு வெளையாட்டு, என்னு நெஜம், இண்ணு சொல்றத்துக்கில்லே அம்மா.

ம. அவன் இல்லாமற்போனுல் போகிறது—அவன் தம்பி ஒருவன் இருக்கிறுனே, அவனுக்காவது பிடித்து கட்டுகிறது தானே?

ர. அவன் மாத்திரம் என்னு நிச்சயம்? அவன் தம்பி அங்கதன்!—அண்ணனுக்கு மேலே பொய் பேசுவான் அவன்—அதோ வர்ரான் பாருங்க-என்னமோ மூக்கே சிந்திகினு!

பிரம்மானந்தன் அழுதவண்ணம் வந்து மஹாராணியின் காலில் விழுகிறுன்.

பி. மஹாராணி! மஹாராணி!

ம. என்னுடாப்பா? என்ன சமாசாரம்?

பி. மஹாராணி! என்கதியிப்படி—இப்படி ஆவுமிண்ணு நானு கனுவிலேகூட நெனெக்கலெயே! என் தலைவிதியிப்படியா இருந்தது! [அழுகிறுன்.]

ம. என்ன அப்பா, சமாசாரம்? கொஞ்சம் துக்கத்தை அடக்கிக் கொண்டு சொல்,

பி. என்னென்னு சொல்ரது நானு! எங்க தகப்பனுரு தாயாரு இறந்த போதுகூட நானு இவ்வளவு துக்கப் படலே! அவுங்களுக்குமேலே என்னே அவ்வளவு பட்ச மா பாத்து வந்தாரே! [அழுகிருன்.]

ம. யார் யார்?

பி. எங்க அண்ணுத்தே! அவரெப்போலே அண்ணுத்தே இந்த பூலோகத்திலேயே கெடைக்கப் போராங்களா இனிமேலே! எனக்கு முன்னே கொடுக்காதே வாயிலே ஒரு துரும்பு போடுவாரா? நேத்துகூட—தம்பி! ஒனக்கு கண்ணுலம் தீர்மானிக்காதே நானு கண்ணு லம் பண்ணிக்கமாட்டேன் இண்ணுரே! நம்ப ரெண்டு பேருக்கும் ஒண்ணு கண்ணுலம் ஆவனும் இண்ணு சொன்னுரே! என் கிராச்சாரம்! கிராச்சாரம்!

[நிரம்ப அழுகிருன்.]

ம. கொஞ்சம் துக்கத்தை அடக்கிக்கொள் அப்பா! பிறக் கிறதும், இறக்கிறதும் தெய்வ சங்கல்பம்—இதற்கு நாம் என்ன செய்யலாம்?—பாவம்—சின்ன வயது! கலியாணத்திற்காக ஏற்பாடு செய்துக் கொண்டிருந் தான்.

ர. ஆமாம்!—எம் பொண்ணெ கண்ணுலம் பண்ணிக்கினு செத்திருந்தா?

ம. அடி ரஞ்சிதம்! இறந்து போனபின் ஒருவரையும் தூஷிக்கலாகாது, நேத்துகூட என்னேவந்து கண்டு கொண்டு போனுனே பாவம்!—என்ன உடம்பு அப்பா அவனுக்கு?

பி. உடம்புக்கென்ன—நண்ணுதாயிருந்தது, இன்னமும் இருக்குது—இருந்தாப்போலே இருந்து திடீரிண்ணு சாஞ்சிவுட்டாரு! திடீரிண்ணு காத்தடிச்சி கப்பல் கவுந்துபோச்சி—மஹாராணி! மஹாராணி!

[நிரம்ப அழுகிருன்.]

ம. மனதை தேற்றிக்கொள் அப்பா! பிறப்பதும் இறப்ப தும் சகஜம்.

பி. ஐயோ! இறக்கிறதும் பெழைக்கிறதும் சகஜமாயிருக்க கூடாதா!

ம. அது திருவுளச் செயல்! கண்ணைத் துடைத்துக்கொள் அப்பா, மேல் நடக்க வேண்டிய காரியத்தைப் பார்!

பி. மேலே நடக்கவேண்டிய காரியம் என்ன இருக்கிறது! நானுகூட செத்துப் பூடலாம் இண்ணு இருக்கிறேன்! மஹாராணி எனக்கு உத்தரவு கொடுங்க, [அழுகிறன்.]

ம. சிச்சி! அப்பா சொல்லாதே! போனவர்கள் போன போதிலும் இருக்கிறவர்களாவது சுகமாய் வாழ வேண்டாமா?

பி. இனிமேலே எனக்கென்ன சொகம் இருக்குது! அவ ரெப்போலே என்னெ பட்சமா யார் காப்பாத்த போராங்க! [அழுகிறன்.]

ம. பயப்படாதே, மஹாராஜா இல்லையா? நான் இல்லையா? இப்போ உன் செலவிற்கு ஏதாவது வேண்டுமா கேள் தருகிறேன்.

பி. ஒரு அம்பது பொன்கொடுங்க!—ஏழைங்க எங்களுக்கு என்னத்திற்கு அதிகம்?

ம. அப்படியல்ல, நான் மந்திரிக்கு ஒரு ஓலை கொடுக்கி றேன்—நூறு பொன் கொடுக்கும்படி—நன்றாக சம்பி ரமாக நடத்து காரியத்தை! மஹாராஜா அரண்மனை விதூஷகனுக்கு தக்க அந்தஸ்தின்படி.

பி. எல்லாம் உங்கதயவு—கொடுங்கள்,

[மஹாராணி ஒரு ஓலையை எழுதுகிறள்.]

ஐயோ! இப்படிப்பட்ட தயாளத்தெ கேட்டு அவரு சந்தோஷப்பட கொடுத்துவைக்க இல்லையே!

[ஓலையை வாங்கிக்கொண்டு]

நானு வர்ரேன் மஹாராணி! [போகிறன்.]

ர. எனக்கென்னமோ சந்தேகமாயிருக்குது அம்மா! அவன் நல்ல பலசாலியாச்சே! திடீரிண்ணு என்னமா செத்து பூடுவான்! நான் போய்பாத்து வரட்டுமா?

ம. சீச்சீ! இதுலேகூடவா உனக்கு சந்தேகம்? உன் பெண்ணைக் கலியாணம் பண்ணிக்கொள்ளவில்லை யென்று உனக்கு கோப மிருக்கிறாற் போலிருக்கிறது! ஒருவிதத்தில் உன் பெண்ணை அவன் கலியாணம் பண்ணிக் கொள்ளா திருந்தது நல்ல தல்லவா! கலியாணம் பண்ணிக் கொண்டிருந்தால் அவள் கதி இப்பொழுது என்னவாயிருக்கும்?

ர. நீங்க சொல்வது சரிதான்—எதுக்கும் நானு போயி பாத்துவுட்டு வர்ரேன்—உத்திரவு கொடுங்க கொஞ்சம்.

ம. போய்வா!—போய் சீக்கிரம் வந்துவிடு.

[ரஞ்சிதம் போகிறாள்.]

**காட்சி முடிகிறது.**

## நான்காவது காட்சி

**இடம்—ஆநந்தன் வீட்டில் ஓர் அறை.**

**ஆனந்தனும், பிரம்மாநந்தனும் பேசிக்கொண்டு வருகிறார்கள்.**

ஆ. அடே! தம்பி! இந்த பொம்மனாட்டிங்களே மாத்திரம் எப்பவும் நம்பக்கூடாதுடா! நாத்தியம்பது பொன் கொண்டு வந்தா நம்ப ரெண்டு பேருக்கும் கண்ணாலம் பண்ணிக் கொடுக்கிறேன் தன் ரெண்டு பொண்ணுகளையும் இண்ணு சொல்லிவுட்டு, இப்போ இன்னம் 50 பொன்வேணும் இண்ணு கேக்கரா பாத்தையா, நம்ப அத்தே! இப்படி மோசம் செய்யலாமாடா நம்மே?

பி. ஆமாம்—நம்ப மாத்திரம் கருமாந்திரத்துக்கு இண்ணு சொல்லிவுட்டு ராஜாகிட்ட இருந்து கல்யாணத்துக்கு, பொன் மோசம்பண்ணி வாங்கிவரலையா! அப்படி தான் அல்லாரும்; ஆனாலும் நம்ப அத்தெ நம்ப கல்யாணத்துக்கு தானே கேக்கரா—அதுவும் சாமானுங்க வெலெ அதிகமா போச்சிண்ணு! எப்படியாவது அந்த 50 பொன்னும் தேடரவழியே பாக்கலாம் அண்ணே.

ஆ. ஆனு, அதுக்குவழி நீதான் சொல்லு,

பி. அண்ணு. நீங்க இந்த வழியாபோங்க—நானு இந்த வழியா போரேன்—ரெண்டு பேரும் ஒண்ணு சேர்ந்து போவரத்துக்கில்லே—இன்னும் யாரையானு ஏமாத்தி 25, 25 பொன் வாங்கிகினு வரலாம்—புறப்படுங்க,

[புறப்படுகிருர்கள்.]

ஆ. [திடீரென்று திரும்பிவந்து] அடே! தம்பி! கெட்டுதே குடி! ராஜா ஆளு, வீரபத்திரன்—நம்ப வூட்டுக்கு வர்ராண்டா! அவன்கிட்ட நீ செத்து போயிருக்கிரே இண்ணு சொல்லி யிருக்கிறேன்டா.—வாவா! இப்படி படுத்துக்கோ—செத்து போனுபோலே மூச்செபுடிச்சி கினு இரு— [பிரம்மாநந்தன் அப்படியே செய்கிருன்.]

**வீரபத்திரன் வருகிருன்.**

ஆ. வா அப்பா! வீரபத்தரா! நல்ல சமயத்துக்கு வந்து சேந்தே! எனக்கு யாரும் திக்கில்லே, ஒரு தம்பி இருந்தா அவனும் இப்படி கைவிட்டுட்டான் என்னெ! இந்த சமாசாரம் நம்ப பந்துக்களுக்கெல்லாம் சொல்ல ணுமே, ஆளுயார் ஆப்புடுவான் இண்ணு கவலேபட்டு கினு இருந்தே, சரியான சமயத்துக்கு வந்து சேர்ந்தே அப்பா—நீ சமய சஞ்சீவி?

வீ. [தனக்குள்] நல்ல வேலெதான்!—அப்படியே ஆகட் டும்—என்னண்ணு சொல்ல?

ஆ. இதுகூடவா தெரியாது—நாளெகாலே செத்துபோன வனுக்கு தகனம் இண்ணு சொல்லிவிடு—சீக்கிரம் புறப்படு.

வீ. அப்படியே. [போகிருன்.]

பி. [எழுந்திருந்து] நல்ல யுக்தி பண்ணுங்க அண்ணு—இல்லா போனு நானு எத்தனி நாழிமூச்செ புடிச்சி கினு இருக்கிறது?

வீ. [வெளியில் இருந்து] ஆனந்தா—

ஆ. அடடே! திரும்பிவர்ராண்டா—படுத்துக்கோ. படுத் துக்கோ! [பிரம்மாநந்தன் அப்படியே செய்கிருன்.]

**வீரபத்திரன்** மறுபடி வருகிருன்.

**வீ.** ஏண்டாப்பா, எத்தனி நாழிக்கி இண்ணு சொல்ரது?

**ஆ.** வெய்யில் அதிகமா ஏர்ரத்துக்குள்ளோ—அஞ்சிநாழிக் குள்ள—இண்ணு சொல்லிவிடு.

**வீ.** உம்—ஆநந்தா—என்னுடா என்னமோ மூச்சு வர்ராப் போலே இருக்குதே ?

**ஆ.** உம் உம்! பயித்தியமா என்ன!—காத்து அடிச்சத்துலே துணி அப்படி ஆடுது—சீக்கிரம் போய் வா அப்பா!

**வீ.** இதோ. [போகிருன்.]

**ஆ.** மறுபடியும் திரும்பி வந்தாண்ணு என்னு செய்யரது! —இந்த கதவே மொள்ள தாப்பாளு போட்டுகிறேன் —அடே! தம்பி, நம்ப ரெண்டு பேரும் ஒண்ணு வெளியே போனு யாராவது பாத்து, வூட்டிலே ஒருத் தரும் இல்லே இண்ணு தெரிஞ்சா. ஏதாவது சந்தே கத்துக்கு எடமாகும்—நம்ப சூது தெரிஞ்சு பூடும் —நான் இங்கேயே இருக்கிரேன்—நீ போய் மொதல்லே —அந்த வழியா—எவ்வளவு பொன் கொண்டு வர முடியுமோ பாரு.

**பி.** அப்படியே அண்ணு—நீங்க சொல்ரதும் சரிதான்.

[மற்ருெரு வழியாகப் போகப் பார்க்கிருன். திடீரென்று திரும்பி வந்து]

அண்ணு! அண்ணு! ராஜாத்தி வேலேக்காரி வர்ராண்ணு —ராஜாத்தி கிட்ட நானு பேசிக்கினு இருந்தபோது— நான் சொன்னத்தெ யெல்லாம் கேட்டுகினு இருந்தா! அவ மொகத்தே உத்துபார்த்தேன் — என்னமோ சந்தேகப்பட்ட மாதிரி அப்பவே தோணுச்சி— இப்ப வந்து, உங்களெ பாத்துட்டா இண்ணு, காரியம் கெட்டு பூடும்!—நீங்க படுத்துகிங்க! படுத்துகிங்க! என்மாதிரி! [அப்படியே ஆநந்தன் செய்கிருன்.]

**ரஞ்சிதம்** வருகிருள்.

**பி.** என்னும்மா சமாசாரம்? இந்த வேளயிலே வந்தைங் களே ?

ர. வேறே ஒண்ணுமில்லே, மஹாராணி அனுப்பிச் சாங்கோ—எப்போ எடுக்கப் போராங்கண்ணு கேட்டு கினு வரச்சொல்லி—அரண்மனையிலிருந்து நாலு ஆளு அனுப்பிக்கரத்துக்காவ.

பி. அவ்வளவு உபகாரம் யார் பண்ணப்போராங்க!—நாளெ காலமே தானிண்ணு சொல்லுங்க—எங்க பந்துங்களெல்லாம் வரவேண்டியிருக்குது.

ர. அப்படியே சொல்கிறேன். [போகிருள்.]

ஆ. [எழுந்திருந்து] அடே, அவ திரும்பிவரப்போரா பாத்து கினு இரு—

பி. வரமாட்டா அண்ணு, நாளெ காலமே வரைக்கும்!

[அந்த பக்கம் போய்பார்த்து]

அண்ணு! அண்ணு! நீங்க சொன்னது சரிதான் அண்ணு! அதோ திரும்பி வர்ராள்! படுத்துங்க! படுத்துங்க!

[ஆனந்தன் அப்படியே செய்கிருன்.]

ரஞ்சிதம் மறுடியும் வருகிருள்

ர. அப்பா, ஒண்ணு கேக்க மறந்து பூட்டேன். நாளே காலமே எத்தனி நாழிக்கு?

பி. பத்து நாழிக்கிமேலே—ஒருவேளெ எங்க பந்துக்க ளெல்லாம் வர்ரத்துக்கு நேரமாணு—

ர. அது நாயந்தான், நான் வர்ரேன்—ஏண்டாப்பா இங்கே நானு வர்ரப்போ என்னமோ பேச்சி கொரல் கேட்டாப்போலே இருக்குதே?

பி. நானு யாரோட பேசரது? இந்த பக்கத்து ஊட்லே ஒரு பயித்யம் இருக்குது, அது சும்மா பேசிகினு இருக் கும்—அந்தக் குரல் கேட்டிருக்கும்!

ர. சரிதான்—நானு வர்ரேன். [போகிருள்]

பி. இந்த கதவெயும் தாப்பாள் போட்டுக்கரேன்.

[அப்படியே செய்து]

அண்ணு, மீதி 50 பொன் சம்பாதிக்கரத்தே அப்புறம் பாத்துகலாம்—முன்னே இந்த ராத்திரியே நம்ப

சாமான்களே சுத்திகினு, இந்த ஊரே விட்டு பூடணும்! இல்லாபோனு சமாசாரம் வெளியாயி பூடும், அப்புறம் ராஜா நம்மே தண்டிச்சூடுவாரு! கண்ணுலும் எப்படியாவது ஆயிபோனு பரவாயில்லே, அப்புறம் கல்யாணம் இப்பொதானே ஆச்சி, இண்ணு மன்னிச்சுட்டாலும் உடுவாரு.

**ஆ.** ஆமாண்டாப்பா!—வா, நம்ப துணிமணியெல்லாம் சீக்கிரம் மூட்டை கட்டுவோம்.

[அப்படியே செய்கிருர்கள்.]

**காட்சி முடிகிறது.**

---

## ஐந்தாம் காட்சி

**இடம்**—*அரண்மனைத் தோட்டம்.*

**மஹாராஜாவும், மஹாராணியும்,** *எதிர்புறமாக வந்து சந்திக்கிருர்கள்,*

**ம.** தேவி, என்ன அவ்வளவு அவசரமாய் வருகிருய்?

**தே.** உங்களை பார்க்கத்தான் வந்தேன்.

**ம.** நான் உன்னைப் பார்க்க அவசரமாய் வந்தால்—நீ என்னைப் பார்க்க அவசரமாய் வருகிருய்; என்ன விசேஷம்?

**தே.** நமது அரண்மனை விதூஷகன் திடீரென்று இறந்து போய் விட்டானும்.

**ம.** யார் நமது அரண்மனை விதூஷகனு!—ஆநந்தனு!

**தே.** ஆமாம்—பாவம்!

**ம.** உனக்கென்ன பயித்தியமா? உனக்கு யாரோ தப்பாக சொல்லியிருக்க வேண்டும்!—திடீரென்று இறந்து போனது அவனல்ல—அவனுடைய தம்பி—

**தே.** உம் எனக்கா பயித்தியம்? அவன் தம்பி இப்பொழுது தான் என்னிடம் வந்து சொல்லிவிட்டுப் போனுன்!—தம்பி உயிரோடு தான் இருக்கிருன். இறந்து போனது அவன் அண்ணன் ஆனந்தன்.

ம. நீ என்ன கனவு கினவு காண்கிறாயா என்ன! ஆனந்தன்தான் என்னிடம்வந்து சற்று முன்பாக அவன் தம்பி திடீரென்று இறந்து போனான் என்று சொன்னானே!

தே, என்ன வித்தையாயிருக்கிறது!—அவன் தம்பி என்னிடம் வந்து இப்பொழுதுதான் அழுதுவிட்டு போனானே—அவன் அண்ணன் கர்ம செலவுக்காக மந்திரியிடம் நூறு பொன் கொடுக்கும்படி ஓலை வாங்கிக் கொண்டு போனானே!

ம. பிரம்மானந்தனா! — என்ன ஆச்சரியம்! — அவன் இறந்துபோனான் என்றுசொல்லி ஆநந்தன் என்னிடம் நூறு பொன்னுக்கு ஓலை வாங்கிக்கொண்டு போனானே—நீ என்னவோ மதிமயங்கியிருக்கிறாய், நான் சொல்வதைக் கேள்! மடிந்தவன் ஆனந்தன் தம்பிதான்!

தே. இதென்ன இப்படி சொல்கிறீர்களே! அவனை என் கண்ணால் சற்றுமுன்பாக நான் பார்த்தேனே! மடிந்தவன் ஆனந்தன் தான்!

ம, பயித்தியக்காரி என்கண்ணால்—ஆநந்தனைப் பார்த்துவிட்டு அவன் மடிந்தான் என்று நான் எப்படி நம்புவது! இதோ வீரபத்திரன் வருகிறான்—அவனை வேண்டுமென்றால்—கேட்டுப்பார்.

**வீரபத்திரன்** வருகிறான்.

வீ. மஹாராஜா நமஸ்காரம்—ஆனந்தன் தம்பியை நாளைக்குத்தான் எடுக்க ஏற்பாடு செய்திருக்கிறான்.

தே. யாரை?

வீ. ஆநந்தன் தம்பியை — பிரம்மானந்தனை.

தே. என்னடா அப்பா — ஆச்சரியமாயிருக்கிறது! இப்பொழுதுதான் சற்று முன்னே என்னிடம் அவன் வந்து தன் அண்ணன் இறந்துபோய் விட்டதாகச் சொன்னானே!

வீ. இல்லைங்க இறந்துபோனது ஆனந்தன் தம்பிதான், நான் தான் அவன் வீட்டுக்குப்போய் பிணத்தைப் பார்த்துவிட்டு வருகிறேனே.

**தே.** எனக்கென்னமோ இன்னும் சந்தேகமாக இருக்கிறது; —ஆ இதோ நமது வேலைக்காரி ரஞ்சிதம் வருகிருள். அவள் அவர்களுடைய வீட்டிற்குப்போகத்தான் உத்திரவு கேட்டுக்கொண்டு போனுள்!—ரஞ்சிதம்!—

**ரஞ்சிதம் வருகிருள்.**

**தே.** ரஞ்சிதம், இறந்துபோனது யார்அடி?

**ர.** இதென்னம்மா இப்படி கேக்கரைங்களே! இறந்து போனது நம்ப அரண்மனை விதூஷகன்—ஆநந்தன்!

**வீ.** ஆநந்தனு!—பயித்தியம்.

**ம.** பயித்தியக்காரி!

**ர.** எனக்கா பயித்தியம்?—மஹாராஜா, என் பேரிலே சும்மா கோவிச்சிகாதைங்க, நானு அவுங்க வூட்டுக்கு போய்தான் இப்ப வர்ரேன்—நான் அங்கே நேரேபார்த்தேன்—ஆனந்தன்தான் செத்துப் போய் விட்டார்! பாவம் அவர் தம்பி ரொம்ப துக்கப்படுகிருன் பாவம்!

**வீ.** ஏ! உனக்கென்ன கண்ணு கெட்டுப்போயிருக்குதா என்ன! நான் போய் இப்போதான் பாத்தூட்டு வர்ரேன்—அவன் தம்பி செத்துப்பூட்டானிண்ணு ஆநந்தன் ஓயாதே அழுதுகினு இருந்தானே!

**ம.** வீரபத்திரன் பொய் பேசமாட்டான்! தேவி, நீயும் உன் தாதியும் சொல்வது ஏதோ மனப் பிராந்தியாகும்.

**தே.** இதென்ன இப்படி சொல்கிறீர்களே!—என் கண்தான் கெட்டுப்போயிருந்தது, ரஞ்சிதம் கண் கூடவா கேட்டுப் போயிருக்கும்—அவளுக்கும் மனேப்பிராந்தியாயிருக்குமா?

**ம.** [கோபத்துடன்] தேவி! என்ன இன்னும் அதையே சொல்கிருயே! ஆனல் என் கண்கள் கெட்டுப்போய் விட்டதென்கிருயா?

**தே.** நாதா! நீங்கள் கோபித்துக் கொள்ளாதீர்கள் என்மீது! எனக்கென்னமோ இன்னும் சந்தேகமாகத்தானிருக்கிறது—நாம் நேரில் அவன் வீட்டுக்குப் போய் பார்ப்போம், வாருங்கள்—அப்பொழுது தெரிந்துபோகிறது, யார் வார்த்தை பொய், யார் வார்த்தை நிஜம் என்று.

ம. அப்படியே செய்வோம்-நான் குதிரையேறி அங்கு போகிறேன்—நீ பல்லக்கில் அங்கு உடனே வந்து சேர்—யார் இறந்தது என்று தெரிந்து விடுகிறது! வீரபத்திரா, நீயும் என்னுடன் வா— [போகிருர்.]

வீ. அப்படியே!—ஏ! ரஞ்சிதம், எல்லாம் உன்னுலே வருது இந்த கஷ்டமெல்லாம்.

ர. ஏ! நீ தான் பொய் பேசரே! [வீரபத்திரன் போகிருன்.] அம்மா நானும் ஒங்களோடே வர்ரேன்—அவுங்க வூட்டுக்குப் போய் இந்த வீரபத்திரன் பொய் பேசனத்தே ரூபிக்கலாம் வாங்க! [போகிருர்கள்.]

**காட்சி முடிகிறது.**

---

## ஆருவது காட்சி

இடம்—*ஆநந்தன் வீடு.*

**ஆநந்தனும், பிரம்மாநந்தனும்,** *மாறுவேஷம் பூண்டு மூட்டைகள் கட்டிக்கொண்டிருக்கிருர்கள்.*

ஆ. அடே தம்பி! இந்த வேஷம் எனக்கு எப்படி யிருக்குதுடா?

பி. எனக்கே உங்களெ கண்டு பிடிக்கமுடியலெ அண்ணு! அச்சம் அப்படியே அம்பட்டனு பொறந்தது போலவே இருக்குது உங்களெ பாத்தா! அப்படியே எப்பவும் இருந்தூடுங்களே அண்ணு!

ஆ. குட்டுடா இவனே!—ஏண்டா என்ன அம்பட்டனுக்கிவுட பார்க்கிருயோ?—நீ சன்யாசியா இப்படியே இருந்துடேன்?

பி. இருந்தூடரேன் அண்ணு—அப்புறம் எப்படி கண்ணுலம் பண்ணிக்கிறது இண்ணு பாக்கரேன்.

ஆ. முன்னே இந்த ஊரே விட்டு வெளியே போர வழியெ பார்க்கலாம்—அப்புறம் கண்ணுலத்தேபத்தி யோசிக்கலாம்—நம்ப ரெண்டுபேரும் ஒண்ணுபோனு ஏதாவது சந்தேகத்துக்கு எடமாகும்—நம்ப ஒவ்வொருத்தரும் ஒருவழியா போகலாம் வூட்டேவுட்டு; அப்புறம் ஊருக்கு வெளியிலே இருக்கிற பனையாத்தா கோவி

லண்டே சேருவோம்—நீ அப்படி சுத்திகினுவா-நானு இப்படி சுத்திகினு வர்ரேன்—நானு முன்னே புறப் படரேன்— [புறப்படுகிருன்.]

[வெளியில் சத்தம்] அதென்னடா சத்தம்?— [வெளியில் பார்த்து]

அடடே! கெட்டுதடாகுடி! மஹாராஜா வர்ராருடா, குதிரைமேலே நம்பவூட்டுக்கு! என்னமோ சந்தேகப் படராரோ என்னமோ!—வாடா! வாடா! சீக்கிரம்! இந்த வேஷத்தை எடுத்தாட்டு. முன்னெபோலெ செத்தாப்போலெ படுத்துக்கோ!

பி. என்ன அண்ணு, பெரிய கஷ்டமாயிருக்குது! எத்தனி தரம் செத்து போரதண்ணு!—வேஷத்தே கலேச்சூட ரேன் அண்ணு! இந்தசன்யாசி உடுப்பெ இங்கே ராஜா பாத்தாருண்ணு, என்னமாறு சந்தேகப்படுவாரு, இந்தெதருவுலே குப்ப தொட்டியிலே போட்டுடரேன்,

[வெளியேபோய் உடனே ஓடிவருகிருன்.]

அண்ணு அண்ணு! நம்ப யோசனே யெல்லாம் பாழாப் போச்சி அண்ணு!—ராஜாத்தி இந்த பக்கம், பல்லக் கிலே வந்து எரங்கராங்க! அந்த வேலெக்காரி என்ன மாறு கோள் சொன்னுளோ என்னமோ!—நீங்க செத்துபூட்டைங்க இண்ணு மஹாராணி கிட்ட சொல்லி விட்டேனே! நீங்களும் செத்தாப்போலே படுத்துங்க-உங்க வேஷத்தெ எடுத்துவுட்டு சீக்கிரம்!

ஆ. என்னடா எழுவாபோச்சி! ஒரு கண்ணுலம் பண்ணிக் கிரத்துக்காக, எத்தனிதரண்டா செத்துப்பூடரது?

[அப்படியே செய்கிருன்.]

அடே! தம்பி! மூச்சிகிச்சி உடாதே!—கப்சப்!

பி. அண்ணு! நீங்க கண்ணெ கிண்ணெ தெறக்கப் போ ரைங்க பத்திரம்!

ஆ. குட்டுடா இவனெ!—படுத்துக்கடா!

பி. நீங்க படுத்துங்க அண்ணு! [இருவரும் படுத்துக் கொண்டு போர்த்துக் கொள்கிருர்கள்.]

**பீமராஜன் வீரபத்திரனுடனும், மஹாராணி ரஞ்சிதத்துடனும், இரண்டு பக்கங்களிலிருந்து வருகிருர்கள்.**

பீ. என்ன ஆச்சரியம்!—இரண்டு பெயரும்!—

ம. இறந்து போய் விட்டார்களா என்ன!

பீ. அது எப்படி நேர்ந்திருக்கக் கூடும்?—தன் தம்பி இறந்து விட்டதாக என்னிடம் வந்து சொன்னுனே, ஆனந்தன்!

ம. தன் அண்ணன் காலமாய் விட்டதாக, பிரம்மானந் தன் சற்று முன்பாகக் கூறினுனே என்னிடம்!

வீ. இரண்டுபேரும்-ஒரே சமயத்துலே செத்துப்போ யிருந்தா—

பீ. நீ ரொம்ப புத்திசாலி! எவ்ஞவது ஒருவன் தானே முத லில் இறந்து போயிருக்கக் கூடும்? ஒரு வேளை முன்பு தம்பி செத்துப் போயிருப்பான், பிறகு அண்ணன் அந்த வருத்தம் தாளமுடியாது இறந்து போஞனே என்னமோ?

ம. நாதா, அப்படி யிராது, அண்ணன்தான் முதலில் இறந்துபோயிருக்கவேண்டும், தம்பி என்னிடம் கூறின படி; அப்புறம் அண்ணன் போய் விட்டானே என்று துக்கத்தால் மாண்டுபோஞனே என்னமோ?

பீ. இந்த சந்தேகத்தை யார் நிவர்த்தி செய்வது? எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது—அடெ வீரபத்திரா! நம்முடைய அரண்மனை வெட்டியானிடம் நடந்ததை சொல்லி, பட்டணமெல்லாம் பறையறையச் சொல்— இவர்களிருவர்களில் யார் முதலில் காலமாய் விட்டது என்பதைக் கண்டு பிடித்துச் சொல்பவர்களுக்கு நான் நூறு பொன் கொடுப்பதாக!

ஆ.பி. [ஒரே தடவையில் இருவரும் எழுந்திருக்கிருர்கள்.] ஆ! ஆ!

ஆ. நான் சொல்ரேன்—என் தம்பிதான் மொதல்லே செத்து பூட்டான் மஹாராஜா!

பி. நான் சொல்ரேன்! என் அண்ணன்தான் மொதல்லே செத்துபூட்டார் மஹாராஜா!

[எல்லோரும் நகைக்கிருர்கள்]

ஆ. நூறுபொன் எனக்குதான் கொடுக்கவேண்டும் மஹா ராஜா!

பி. நூறுபொன் எனக்குதான் கொடுக்கணும் மஹாராஜா!

பீ. இதென்ன விகடமடா திருட்டுப்பயல்களா! உங்கள் இருவரையும் வாஸ்தவத்தில் கொன்றுவிடும்படி உத்திரவு செய்கிறேன் மந்திரிக்கு!

ஆ. மஹாராஜா! மஹாராஜா! அப்படி உத்திரவு ஆவக்கூடாது!

பி. மஹாராஜா! ஒணும்மிண்ணு, எங்களுக்கு கண்ணாலம் ஆனபிறகு கொண்ணுடச் சொல்லுங்கள்,

பீ. ஏண்டா! உங்களுக்கு கல்யாணம் ஆவதற்காக இறந்ததுபோல் பாசாங்கு செய்யச் சொன்னூர்களோ!

பி. இல்லே மஹாராஜா! நீங்க கோவிச்சிக்ககூடாது தயவு பண்ணி!—நடந்த சமாசாரத்தெ நானு நெஜம்மா சொல்லி வுடரேன்—எங்க அத்தைக்கு இரண்டு பொண்ணுங்க இருக்கிறுங்க—அவங்களே எங்களுக்கு கண்ணுலம் பண்ணி கொடுக்கிரேனிண்ணுங்க-நீங்க என்னமோ இளவரசருக்கு கண்ணுலம் ஆவும்போது பாத்துகலாம் இண்ணேங்களாம்—அது வரைக்கும் எப்படி காத்துகினு இருக்கிறது—சீக்கிரம் கண்ணுலம் ஆவணும் இண்ணு—

பீ. [சிரித்துக்கொண்டே] கருமாந்திரத்திற்காகப் பொன் கேட்டீர்களோ!

ஆ. ஆம் மஹாராஜா! ஆயிரம் பொய் பேசியாணுலும் ஒரு கண்ணுலம் பண்ணலாம் இண்ணு பெரியவங்க சொல்லியிருக்கிராங்க! நாங்க ஒவ்வொரு கண்ணுலத்துக்காக ஒவ்வொரு பொய்தானே பேசினேும்!

[எல்லோரும் நகைக்கிருர்கள்.]

**காட்சி முடிகிறது.**

**நாடகம் முற்றியது.**

# ஆஸ்தானபுரம் நாடக சபை

## நாடக பாத்திரங்கள்

| | | |
|---|---|---|
| தேசராஜன் | ... | .... ஆஸ்தானபுர அரசன் |
| ஹேமலதா | .. | .... தேசராஜன் மனைவி |
| லட்சுமி சந்திரன் | .. | ... ஹம்சிகையின் காதலன் |
| ஹம்சிகா | .... | .... லட்சுமி சந்திரன் காதலி |
| தாமத்ரையன் | .... | .... ஹைரம்பி காதலன் |
| ஹைரம்பி | .... | .... தாமத்ரையன் காதலி |
| பிலந்தரன் | .... | .... ஆஸ்தானபுரம் தர்பார் பக்ஷி |
| கோஞ்சு | | |
| சிசுநாகன் | | |
| பாதம் நாய்க்கன் | | .... ஆஸ்தானபுரம் நாடக சபை நடிகர்கள். |
| தம்பட்டன் | | |
| தர்மலிங்கன் | | |
| குட்டி சைத்தான் | | .... ஓர் சிறு யட்சினி |

**கதை நிகழிடம்**—*ஆஸ்தானபுரத்திலும், அடுத்த காட்டிலும்.*

# ஆஸ்தானபுரம் நாடக சபை

## முதல் அங்கம்

### முதற் காட்சி

இடம்—கோணுசு வீட்டில் ஓர் அறை.

**கோணுசு, சிசுநாகன், பாதம் நாய்க்கன், புளுவன், தம்பட்டன், தர்மலிங்கன் வருகிருர்கள்.**

**கோ.** நம்பொ ஐமெயெல்லாம் வந்து சேர்ந்திருக்குதா?

**பா.** அடே, நீ அல்லாரையும் மொத்தமா கூப்பிடரது நல்லது—ஒவ்வொருத்தரா—அந்த பொஸ்தகத்துலே எய்தியிருக்கிற பிரகாரம்.

**கோ.** நம்ப ராஜா வூட்லெ கண்ணுலம் ஆவப்போவுதே—அண்ணைக்கி ராத்திரிக்கி, நம்ப கூத்தாடணும் இண்ணு நம்ப ஊரு ஆஸ்தானபுரம்—முழுதலும் தேடி—நம்ப தான் சரியானவங்க, இண்ணு நேமிச்சி இருக்கிராங்க நம்ப பேரெல்லாம் இதுலே எய்தி யிருக்குது—

[சுருளை எடுக்கிருன்.]

**பா.** என்னடா, எய்வெடுத்தவனு யிருக்கரான்! வெவகாரத்தெ ஒயுங்கா நடத்தவேணுமா?—மொதல்லே என்னு கூத்து இண்ணு தெரிவி—அப்பறம் நாடக பாத்தரங்களை யெல்லாம் அறிவி—கடைசியிலெ வெவகாரத்தெ தெருவி!

**கோ.** அது நியாயம் தான்—நம்ப ஆடப்போர கூத்து—ரொம்ப சோககரமான கல்யாணம்—பெருமீசனுக்கும் திரிசூலிக்கும் — அப்பறம் அவங்கரெண்டுபேரும் ரொம்ப வேடிக்கையா செத்து பூடராங்க!

**பா.** நல்ல கதையாச்சுதே அது!—நான் கேட்டிருக்கிறேன்—கடைசியிலே பலே ஜோக்காயிருக்கும்! அடே கோணுசு

பத்தா, அந்த பெட்டியிலெ யிருக்கர பேரையெல்லாம் ஒவ்வொரு வேஷமா படிச்சிகினுவா-அடே பசங்களா, நீங்கள்ளாம் வரிசையா நில்லுங்க.

**கோ.** நானு ஒருத்தன் ஒருத்தம் பேரா கூப்பிட்டுகினு வர்ரேன் — ஆஜர் சொல்லிகினு வாங்க—கைக்களவன் பாதம் நாய்க்கன்.

**பா.** ஆஜர்!—எனக்கு என்னு வேஷம் இண்ணு சொல்லி வுட்டு—அப்புறம் போ,

**கோ.** பாதம் நாய்க்கா—உனக்கு பெருமீசன் வேஷம் கொடுத் திருக்குது.

**பா,** அவன் யார்டா பெருமீசன்? அவன் என்னு ஷோக் பேர்வழியா, தடபுடல் ஆசாமியா ?

**கோ,** பலே ஷோக் பேர்வழி! ஒரு பொம்பளே பேர்லே ஆசெ பட்டு, தன்னையே கொண்ணுகினு செத்து பூடரான்!

**பா.** ஆனு—ஆந்த வெஷத்தெ சரியா ஆடரது இண்ணு ரொம்ப அழணுமே!—நானு அந்த வேஷங் கட்டி அழ ரத்தே பாத்தாங்கண்ணு—அப்படியெ நாடகத்தே பாக்கரவங்கல்லாம் அழுது அழுது டுமான்ஜி பூடமாட் டாங்களா? கண்லெ இருந்து வர்ர ஜலமெல்லாம் வெள்ளமா போகாதா? கண்லெ கொஞ்சம் வெங்கா யத்தெ தீட்டிவுடனும்!—ஒண்ணு தீர்ந்தது—அப்புறம் —ஆனாலும் என் வழியெல்லாம் தடபுடல் ஆசாமி தான்! ஒரு பீமசேனன் வேஷம் கட்டனேண்ணு, புலி கிலி, பூனெ கீனே!—எது வந்தாலும் கிழிச்சி எறிஞ்சிட மாட்டனு!

மலையோடு மலையைத் தாக்கி!
மண்ணோடு மண்ணைப் பொடியாக்கி!
வெண்ணெயை வெட்டி, வில்லாக வளைத்து
சூரியன் ரதத்தைச் சுழலும்படிச் செய்து!
அண்டரண்ட பயிரண்டங்களையும்
அனைத்தையும் முண்டமாக்குவேன்!—

எப்டி?—பலே ஜோக்காயில்லே!—இது பீமசேனன்

வேஷம்—வீரரசம்!—சிங்காரரசம் சோககரமாயிருக்கணும்—உம்—அப்பறம், மத்தவங்க வேஷத்தெயெல்லாம் சொல்லிகினு போ.

**கோ.** பிராந்திப் புளூவன்—துத்தி.

**பு.** ஆஜெர், கோணசு பத்தர்.

**கோ.** புளூவா. நீ திரிசூலியெ எடுத்துக்கணும்.

**பு.** திரிசூலி யாரது? ரெண்டாவது ராஜபார்ட்டா?

**கோ.** அயன் இஸ்திரிபார்ட்-அயன் ராஜபார்ட் பொஞ்சாதி.

**பு.** அடடெ! தூ; எனக்கு பொம்மனட்டி வேஷம் வாணாம்பா—எனக்கு மீசெவருதப்பா!

**கோ.** அது பரவாயில்லெடாப்பா. அத்தெ மூக்காடுபோட்டுகினு மறைச்சிகணுபோச்சி! கொரலே மாத்திரம்—பொம்மனட்டி கொரல்மாதிரி மாத்திகணும்.

**பா.** அப்படி மூஞ்செ மறைச்சிகரதானா, அந்த வேஷம்கூட நானு எடுத்துகரனே! தடபுடலா சின்ன கொரல்லெ பேசுவனே!—திரிசூலி! திரிசூலி! ஹா! என் கண்ணாளா பெருமீசையே! — உன் கண்ணாட்டி திரிசூலி! —பெண்ணே! கண்ணே! மண்ணே! மணியே!

**கோ.** அதெல்லாம் ஒதவாதப்பா! நீ பெருமீசன் வேஷந்தான் எடுத்துக்கணும்.—புளூவா நீ திரிசூலி.

**பா.** சரி—அப்புறம்போ.

**கோ.** ரம்பெ தர்மலிங்கம்—தையக்காரன்.

**தர்.** இதோ ஆஜெர், கோணசுபத்தரே.

**கோ.** ரம்பெ தர்மலிங்கம், நீ திரிசூலியின் தாயாரை எடுத்துக்கணும்—தமாஷ் தம்பட்டன்—கலாய் பூசரவன்.

**தம்.** ஆஜெர்—கோணஸ்பத்தரே,

**கோ,** நீ வந்து பெருமீசன் தகப்பன்—நானு திரிசூலியின் தகப்பன்—தகரவேலே சிசுநாகன்—நீ சிங்கவேஷம்—அவ்வளவுதான்-பாத்திரங்களெல்லாம் சரியாபோச்சி இண்ணு நெனெக்கரேன்.

**சி.** சிங்கம் பேசவேண்டிய பேச்செல்லாம் நீ எழுதிஉட்டையாப்பா? எழுதியானு, உன்னெ இப்பவே கேட்டுக்கரெம்பா, அத்தெ இப்பவே குடுத்தூடு எங்கிட்ட, எனக்கு குருட்டு பாடம் பண்ண சீக்கிரம் வராது.

**கோ.** நீ குருட்டுபாடம் பண்ணுமலே அத்தெ சொல்லிவுடலாம்—ஏனின்னு, நீ பேசவேண்டியதெல்லாம், சும்மா கர்ஜிக்க வேண்டியதுதான்.

**பா.** அப்படியானு அந்த சிங்க வேஷம் கூட நான் கட்டரனெ! நண்ணு கர்ஜிப்பேனே நான்! அத்தெ கேக்ரவங்கல்லாம் சும்மா டுமான்ஜி பூடமாட்டாங்களா; நானு சும்மா கர்ஜிச்சேனின்னு—சும்மா! மகாராஜா மறுபடியும் இவன் கர்ஜிக்கட்டும் மறுபடியும் இவன் கர்ஜிக்கட்டும்!—இண்ணு சொல்லமாட்டாரா!

**கோ.** அப்படி நீ கர்ஜிச்செ இண்ணு, மகாராணி அந்தப்புற இஸ்திரிங்கல்லாம் பயந்துபூட மாட்டாங்களா!—அப்பறம் நம்பளுக்கெல்லாம் கழுத்துக்கு கவுறுதான்!

**மற்றவர்கள்;** அப்ப நம்பல்லாம் சாவ வேண்டியதுதான்!

**பா.** என்னடாபசங்களா!—ராஜ இஸ்திரிங்களெயெல்லாம் பயப்பட வைச்சா நம்ப ஜமெயெல்லாம் தூக்கிலே போடுவாங்க இண்ணு எனக்கு தெரியாதா என்னு! என் கொரலெ கம்பீரப் படுத்திகினு, மாடப் பொருவெ போலெ குடு குடு குடு குடு இண்ணு கூவ மாட்டனு! சும்மா குயில்மாதிரி கூவமாட்டனு!

**கோ.** அதெல்லாம் ஓதவாது, நீ பெருமீசன் வேஷம்தான் போடணும். பெருமீசன் அயன் ராஜபார்ட்டு ரொம்ப அழகாயிருக்கணும், மம்மதனெபோல இருக்கணும், அத்தொட்டு அந்த வேஷம் நீ தான் எடுத்துகணும்.

**பா.** சரி, அப்படியே ஆகட்டும். அந்த வேஷத்துக்கு நானு என்னு டோபா போட்டுகணும்?

**கோ.** ஏன்? உனக்கு எந்த டோபா போட்டுக்க இஷ்டமோ அத்தெ போட்டுக்கோ.

**பா.** சுருள் சுருளாயிருக்குதே, அந்த டோபா போட்டுக லாமா? நீட்டா யிருக்கர டோபா போட்டுகலாமா? சும்மா அப்படி பாதி கத்திரிச்ச டோபா போட்டுக லாமா? இல்லாப்போனு, கரடியாட்டம் இருக்குதே அத்தெ போட்டுகலாமா? இல்லாப்போனு, நெருக்கமா வெட்டி யிருக்குதே அத்தெ போட்டுகலாமா?

**கோ.** நெருக்கமா வெட்டியிருக்கர டோபா போட்டுகனெ இண்ணு, ஜெயில்லே இருந்து இப்பதான் உன்னெ உட்டுட்டாங்க இண்ணு நெனச்சிகிவாங்க, பாக்கரவங் கல்லாம்!—அது மாத்திரம் வாணும். இந்தாங்க டாப்பா—உங்க பாகங்கல்லாம்—உங்களே கேட்டுக்க ரேன், வேண்டிகரேன்—தயவு பண்ணி நாளெராத் திரிக்குள்ளோ குருட்டுப்பாடம் பண்ணிகினு, அரம னெக்கி பின்னுலே ஒரு காடு மாதிரி இருக்குதே—பட் டணத்துக்கு ஒரு கல்லுக்கு அப்பறம்—அங்கே வந்து சேருங்கோ—நெலா வெளிச்சத்துலே—அங்கே ஒத் திகே நடத்துவோம். பட்டணத்துக்குள்ளே, ஒத்திகே நடத்தினு, கும்பல் கூடிப்பூடும்—நம்ப சமாசாரம் எல் லாம் தெரிஞ்சி பூடும். இதுக்குள்ள நம்ப கூத்துக்கு வேண்டிய சாமான்களுக்கெல்லாம், ஒரு ஜாப்தா போடரேன், வந்து சேர்ரத்துக்கு மறந்து பூடா தைங்க பத்திரண்டாப்பா.

**பா.** அப்படியே சேர்ரோம்—அங்கே நம்போ ரகசியமாயும் தைரியமாயும் ஒத்திகெ பண்ணலாம் — அல்லாரும் கொஞ்சம் கஷ்டம் எடுத்துகோங்கடாப்பா—எல்லாம் சும்மா ஜோக்காயிருக்கணும்—போய்வாங்க!

**கோ.** அங்கே பெரிய அரசமரம் இருக்குதெ அங்கெ சந்திப் போம்.

**பா.** அப்படியே — சரியாயிருந்தா சரிகெ தலெகுட்டெ! இல்லா போனு தலெமொட்டெ! [போகிறார்கள்.]

**காட்சி முடிகிறது.**

## இரண்டாம் காட்சி

இடம்—வனப்பிரதேசம். காலம்—இரவு.

**கோணுசு பத்தன் சிசுநாகன், பாதம் நாய்க்கன், புளுவன், தம்பட்டன், தர்மலிங்கன்** வருகிருர்கள்.

**பா.** எல்லாரும் வந்தூட்டமாடா ?

**கோ,** சரிசரி!—இது நம்ப ஓத்திகெ பண்ண சரியான இடம். பச்சிண்ணு இருக்குதே, இந்த இஸ்தலம் தான் நம்ப நாடவமேடே—இந்த மூங்கில் பொதார், நம்ப வேஷம் போட்டுகிற இடம்—ராஜா எதிர்லே எப்படி ஆடு வோமோ அப்படியே ஆடிப்பாக்கலாம்.

**பா.** [கூனித்துக்கொண்டு] கோணுசு பத்தா.

**கோ.** என்ஞ சொல்ரே அப்பா, பாதம் நாய்க்கா ?

**பா.** இந்த பெருமீசன் திரிசூலி நாடகத்துலே செல வெவ காரங்க இருக்குது, அது ஓரத்தருக்கும் புடிக்காது—மொதல்லெ, இந்த பெருமீசன் கத்தியெ இழுக்கணும் தன்னையே கொண்ணுகிறத்துக்கு, இத்தெ பாத்து ராஜ இஸ்திரிங்கல்லா பொறுக்க மாட்டாங்க—இதுக்கு என்ஞ ஐவாப் சொல்ரே ?

**தம்.** எப்பாடி! ரொம்ப பயம்! அது கூடவே கூடாது.

**தர்.** மத்ததெல்லாம் ஆடி முடிஞ்ச உடனே, அந்த கொண்ணு கிரத்தெ மாத்திரம் உட்டூடணும்.

**பா,** அப்படி வேண்டவே வேண்டாம்—எல்லாத்தையும் சரிப்படுத்த நானு ஒரு யுக்தி—யோசனே, பண்ணி யிருக்கிறேன். எனக்கு ஒரு முன்ஒரெ எழுதிக் கொடுத் தூடு — அந்த முன் ஓரெ என்ஞ சொல்லணும் இண்ஞ — நாங்க கத்திங்களாலெ ஒரு கெடுதியும் செய்யரதில்லே—பெருமீசன் வாஸ்தவமா கொல்லப் படலெ — இத்தெபத்தி அவுங்களுக்கு சந்தேகமே இல்லாதிருக்கரத்துக்கு—பெருமீசனுகிய நான் பெரு மீசன் அல்ல—தரி நெய்யர பாதம் நாய்க்கன்— இண்ணு சொல்லிடணும். அதனுலே அவுங்க பயு மெல்லாம் பறந்து பூடும்,

**கோ.** சரி, அப்படியே ஒரு முன்ஒரெ எழுதரது—இத்தெ ஒரு தருவா எழுதி வுடரது.

**பா.** வேணும் வேணும்--இத்தெ ஒரு விருத்தமா எழுதிபுடு.

**தம்.** ஆமாம்—அதெல்லாம் இருக்கட்டும்—இந்த சிங்கத்தெ பாத்து பொம்மனாட்டிங்கல்லாம் பயப்பட மாட்டாங்களா ?

**தர்.** அதுக்கு சந்தேகமில்லெ—எனக்கென்னமோ பயமாயிருக்குது—நான் சொல்ரனே பாருங்க.

**பா.** ஆசாமிங்களே! இந்த வெவகாரத்தெ இப்பொ நண்ணா ஓசனே பண்ணணும்—அப்பப்பா! பொம்மனாட்டிங்க நடுவுலே ஒரு சிங்கத்தெ கொண்டாரது இண்ணா, அது சாதாரணமான வெவகாரம் அல்லா, ரொம்ப பயங்கரமான வெவகாரம்! இந்த ஒலகத்துலே இருக்கர பயங்கரமான பச்சி ஜாதிங்கள்ளெயெல்லாம், உயிரோடிருக்கர சிங்கந் தான் ரொம்ப பயங்கரமானது! இத்தெ பத்தி நாம்ப ரொம்ப ஓசனெ பண்ணணும்.

**தம்.** அத்தொட்டு, இன்னொரு முன்ஒரெ எழுதி, இவன் சிங்கம் அல்லா இண்ணு சொல்லிவுடணும்.

**பா.** தூ தூ தூ! அப்படி வேணும்பா—அவன் இன்னுண்ணு அவன் பேரெ சொல்லிடணும்—சிங்கத்துங் கழுத்துங் கீழே அவன் மூஞ்சி பாதி தெரியணும். அவன் அந்த வழியா—இந்தப் பிரகாரம் தெரிவிக்கணும்—"அம்மா, பாருங்களேன்!—ராஜ இஸ்திரியிங்களே! நீங்க பயப்படக் கூடாது—நடுங்கக் கூடாது, இண்ணு ஒங்களே கேட்டுகரேன் — வேண்டிக்கரேன் —நானு வாஸ்தவமான சிங்கமா இங்கெ வந்திருக்கரேண்ணு நீங்க நெனச்சா — என் உசிரே கொடுக்கரேன்—உங்களுக்கு பதிலா—எம்பேர்லெ கொஞ்சம் தயவு பண்ணுங்க-நானு சிங்கம் கிங்கம் ஒண்ணுமல்லா —மத்தவங்களே போலே நானும் ஒரு மனுசன்தான்!, இண்ணு—அப்பறம் தான் இன்னான் இண்ணு தம் பேரே சொல்லணும் — அதாவது 'நானு தவலெ சொம்பு செப்பனிடர சிசுநாகன் இண்ணு சொல்லிடட்டும்.

**கோ,** சரி—அப்படியே செய்யரது—ஆனாலும் ரெண்டு கஷ்டமான சமாசாரங்க இருக்குது. நம்ப ஆடர மண்டபத்துக்குள்ளே நெலாவெ கொண்டுவரணும்—ஏநிண்ணா பெருமீசனும் திரிசூலியும் நெலவு வெளிச்சத்துலேதான் சந்திக்கராங்க.

**தம்.** நம்ப நாடவம் ஆடர நண்ணு நெலா இருக்குதா ?

**பா,** பஞ்சாங்கம்! பஞ்சாங்கம்! — பாருங்க பஞ்சாங்கம் எடுத்து! அதுலே பாருங்க நெலா இருக்குதா இண்ணு—பாருங்க அதுலே நெலாவே.

**கோ.** [பார்த்து] ஆமாம்—அண்ணைக்கி நெலா இருக்குது.

**பா.** சரியாபோச்சி—அந்த மண்டபத்துலே நம்ப ஆடர எடத்துக்கு மேலே ஒரு பெரிய ஜன்னலே தெறந்து வைச்சூட்டா போச்சி — அந்த வழியா நெலா வந்தூடுது நம்ப ஆடர எடத்துக்கு!

**கோ.** அப்படியாவது செய்யலாம்—இல்லாப்போனா—ஒருத்தன், ஒரு கையிலே ஒரு மொசலும், இன்னொரு கையிலே ஒரு வெளக்கையும் எடுத்துகுனு வந்து—இவன் நெலாவுக்கு பதிலா வந்தான்—இவன்தான் சந்திரன்! இன்னு சொல்லிடணும்—அப்பறம்—இன்னொண்ணு கஷ்டம் இருக்குது—அந்த பெரிய மண்டபத்திலே ஒரு மதில் செவுரு இருக்கணும்—ஏனிண்ணா—பெருமீசனும் திரிசூலியும்—நம்ப கதெ பிரகாரம்—அந்த மதில் செவுர்லே இருக்கர ஓட்டெ வழியாதான் பேசராங்க.

**தம்,** செவுத்தே நம்போ கொண்டார முடியாது—முடியவே முடியாது—நீ என்னப்பா சொல்லரே பாதம் நாயக்கரே ?

**பா,** நம்பள்ளே யாராவது ஒருத்தன் குட்டிச்செவுரு மாதிரி வேஷம் போட்டுகணும்—அவ்வளவுதான்! அவன் கையிலே ஒரு செங்கல்லு, களிமண்ணு, சுண்ணாம்பு, என்னமானா வைச்சிகினு இருந்தா, அவனெ எல்லாரும் குட்டிச்செவுரு இண்ணு நெனைச்சிகிவாங்க, அவன் ரெண்டு வெரலுங்களே இப்படி வைச்சிகினா—அந்த துவாரத்தும் வழியா பெருமீசனும் திரிசூலியும் ரகசியம் பேசராங்க.

**கோ.** அப்படியாரு—அல்லாம் சரியாபோச்சி—வாங்க எல்லாரும் உக்காருங்க—எல்லா மவனுங்களும் ஒக்காந்து ஒத்திகெ ஆரம்பிங்க—பெருமீசா—நீ ஆரம்பி—நீ பேசி ஆனவுடனே அந்த மூங்கல் பொதுருக்குள்ளே பூடு. ஒவ்வொருத்தரும் பேசவேண்டியது முடிஞ்சவுடனே—அதுக்குள்ள பூடனும்.—அவன் அவன் பாடம் பிரகாரம்.

பின்புறமாக **குட்டிசைத்தான்** வருகிறது.

**கு.** [ஒரு புறமாக] நம்முடைய அரசி படுத்துக்கொண்டு தூங்குகிற இடத்தருகில் யார் இந்த தடியாம்பிள்ளைகள் எல்லாம்! என்ன செய்கிறார்கள் இவர்களெல்லாம்?—ஓகோ! நாடகமா ஆடப்போகிறார்கள்?—நான் இங்கே மறைந்திருந்து பார்க்கிறேன், சமயம் வாய்த்தால் நானும் ஒரு நாடக பாத்திரமாகச் சேர்ந்து கொள்ளுகிறேன்.

**கோ.** ஆரம்பி சீக்கிரம், பெருமீசா — திரிசூலி, நீ எதிரில் நில்லு.

**பா.** திரிசூலி! அழகிய புஷ்பங்களைத் தோற்கடிக்கும்—உன்வாயினின்றும் வரும் நாறுமணமானது—

**கோ.** நறுமணமானது—நறுமணமானது!

**பா.** நறு—மானமானது—என்மனதை அப்படியே மயங்கச் செய்கிறது—ஆயினும் பொறு!—அதோ ஒரு சப்தம் கேட்கிறது. இங்குதான் சற்று இரு, நான்போய் அது இன்னதென்று பார்த்து வந்து உனக்குத் தெரிவிக்கிறேன். [போகிறான்.]

**கு.** [ஒரு புறமாக] இந்த மாதிரி பெருமீசன் வேஷம் நான் இதுவரையில் பார்த்ததேயில்லை. [மறைகிறது.]

**பு.** நானு இப்பொ பேசணுமா?

**கோ.** ஆமாம்—நீ பேசணும். அவன் ஏதோ ஒரு சத்தத்தெ கேட்டு, அது இன்னதுண்ணு தெரிஞ்சிகினுவர போயிருக்கரான், தெரியலெ?

பு. [பாடுகிறன்.]

தேடரும் ஜோதி தெருவெலாம் பிரகாசிக்கும்
காடரும் கவினுடை நாடெலாம் புகழ்ந்திடும்
ஓடரும் துரகம் போன்ற உத்தம வீரனே
ஈடு ஜொடே யில்லாத என்தன் புராண நாத்தா!

உம்மை நான் நாய்க்கர் கோயிலில் சந்திக்கிறேன்.

கோ. நாயனர் கோயிலில்—நாய்க்கர் கோயிலல்லாடாப்பா! —அதிருக்கட்டும், இன்னொரு வரியேகூட இப்பவே சொல்லூட்டைடயெ என்ன? அத்தெ பெருமீசன் திரும்பிவந்து கேட்ட பிப்பாடு சொல்லணும்—எல்லாத்தையும் ஒண்ணு சேத்து ஒப்பிச்சூடரையே என்ன?—வாடாப்பா பெருமீசா! நீ வரவேண்டிய வார்த்தெ சொல்லியாச்சி!—வா வா—கடைசி ரெண்டடி இன்னொருதரம் சொல்லப்பா நீ.

பு. [பாடுகிறன்.]

"ஓடரும் துரகம் போன்ற உத்தம வீரனே
ஈடு ஜொடே யில்லாத என்தன் புராணநாத்தா!

இன்னம் வரலேயே—ஒரு பாட்டு பாட்ரேன் ஆனு—
[பாடுகிறன்]

"உன் மூஞ்சியைக்காண இருகண்கள் போதாதே."

பாதம் நாய்க்கன் கழுதை தலையுடன் வருகிறன்.

பா. இதோ வந்து விட்டேன்! இஷ்டப்படியே புராண நாயகி!

கோ. இதென்னடா இது!—ஐஐயோ! பிசாசு! பிசாசு!—நம் பல்லாம் ஓடிப்பூடலாம் வாங்க! வாங்கடாப்பா!

[பாதம் நாய்க்கன் தவிர மற்றவர்கள் ஓடிப் போகின்றனர்.]

கு. நான் இவர்களைத் தொடர்கிறேன்—
ஒட்டக் குதிரை போலும் வேட்டை நாய் போலும்
காட்டுப் பன்றி போலும் தலையிலாக் கரடிபோலும்

கனைத்தும் கத்தியும்
உளைத்தும் உறுமியும்
கல்விலும் முள்ளிலும்
புதரிலும் பொழிலிலும்

விரட்டி விரட்டி புறட்டித் துறத்துகிறேன்!
[மறைகிறது.]

பா. ஏன் இவங்கெல்லாம் ஓடிப்போனுங்க? என்னெ பயப் படத்தரத்துக்காவ இவங்கெல்லாம் என்னமோ குட்ர யுக்தி பண்ணியிருக்காங்க!

தம்பட்டன் மெல்ல திரும்பி வருகிருன்.

தம். ஐயோ! பாதம் நாய்க்கரே!—என்னு இது! இப்படி மாறி பூட்டைங்களே!—இதென்னு இது! உங்க தலெ மேலே?

பா. என் தலெமேலெ—என் தலெ இருக்குது!—உன் கழுத்துமேலெ இருக்கர கழுதெ மூஞ்சி அல்லா!

[தம்பட்டன் ஓடிப் போகிருன்.]

கோணுசு மெல்ல திரும்பி வருகிருன்.

கோ. ஐயோ! பாதம் நாய்க்கா! யாரோ மந்திரவாதி உன் ரூபத்தே மாத்தி உட்டான்! [ஓடிப்போகிருன்]

பா. இந்தப் படுக்காளிப் பசங்கல்லாம் என்னெ ஏமாத்தப் பாக்கராங்க! என்னெ அசல் கழுதெ ஆக்கப் பாக்க ராங்க! நானு பயந்து பூடுவேண்ணு நினைச்சிகினு இருக்கராங்க!—இந்த எடத்தெ வுட்டு நானு நகரப் போரதில்லெ, அவுங்க என்னு ஒணும்ணுலும் செய்து கட்டும்—இங்கே இப்டி ஓலாத்திகினே பாடிகினு இருக்கரேன்—அத்தெ அவுங்ககேட்டு, இதுக்கல் லாம் பயப்படமாட்டேன் இண்ணு, அவுங்களுக்குத் தெரியட்டும்! [பாடுகிருன்.]

மயில்கள் பாடட்டும், குயில்கள் ஆடட்டும்
மான்கள் வாடட்டும், மலர்கள் ஓடட்டும்
ஒயிலாக நடந்துமே, ஒழுங்காய் கை வீசியே
உத்தமியே உன்னிடம், ஓடிநான் வருவேனே.

[படுத்து உறங்கி விடுகிருன்.]

குட்டிசைத்தான் மறுபடி வருகிறது.

கு. இத் தலையை எடுத்துவிட்டு, இவனை எழுப்பிவிட்டு, நாம் புறப்பட்டு விடுவோம். [அங்ஙனமே செய்கிறது]

பா. [கண் விழித்து] என் பாகம் வரும்போது சொல்லுங் கப்பா—நானு வர்ரேன்—நான் வரவேண்டிய எடம் "மிகவும் பிரியமான பெருமீசனே!" — ஐயோ!—

என்னுடா இது?—கோணூசு பத்தா! துத்தி புளுவா! —தகரக்கடெ தம்பட்டா! — தர்மலிங்கம்! — அடே என் சாமிமலெ!—என்னெ இங்கே உட்டூட்டு ஓடிப் பூட்டாங்க எல்லாரும்! — நான் தூங்கட்டுண்ணு! — தூக்கத்திலெ நானு என்னூ அதிசயங்க பாத்தென்! —நானு கனவு கண்டேணு? — அத்தெ இன்னது இண்ணு சொல்ல எங்கப்பென் மவனாலேயும் முடியாது! அத்தெ கண்ணுலெ சொல்ரத்துக்கு கழுதை யாலே கூட முடியாது. நானு என்னமோ மாறி— அத்தெ மனுஷனாலே சொல்லவே முடியாதிண்ணு!— நானு ஒரு—என் தலெமேலெ ஒரு—என் தலெமேலெ என்னு இருந்ததிண்ணு எந்த மனுஷனாலேயும் சொல்ல முடியாது! — என்ன ஆச்சரியம்! எந்த மனுஷ னும் கண்ணுலெ கேட்டிருக்க மாட்டான்! காதாலெ பாத்திருக்க மாட்டான்! கையாலே நெனைக்கவே முடி யாது! மனசுனாலே தொடகூட முடியாது, அது என்னு கனவு இண்ணு! இந்த கனவெ பத்தி, கோணூசு பத்தன் கிட்ட சொல்லி ஒரு பாட்டு எழுதச் சொல் ரேன்—அதுக்கு, "பாதம் நாய்க்கன் கனவு பாட்டு" இண்ணு பேர் வைக்கரேன்; நாடகத்துங் கடைசி யிலே இத்தெ பாடரேன் -- ராஜாவுக்கு எதிர்லெ அயன் ஸ்திரிபார்ட் எறந்து போனவுடனே நானு இத்தெ பாடணு. ரொம்ப சரியா யிருக்கும்—சொகுசா யிருக்கும்! —ஷோக்காயிருக்கும்! [போகிறன்.]

**காட்சி முடிகிறது.**

---

## நான்காவது காட்சி

**இடம்—கோணூசுபத்தன் வீடு.**

**[கோணூசு, புளுவன், தம்பட்டன், தர்மலிங்கன் வருகிறார்கள்.**

**கோ.** பாதம் நாய்க்கன் ஊட்டுக்கு ஆளெ அனுப்பிச்சையா? அவன் திரும்பி ஊட்டுக்கு வந்தூட்டானு?

**தர்.** அவன் சேதியே ஒண்ணும் தெரியலெ, அவன் என் னமோ மாயமா பூட்டான், சந்தேகமில்லெ.

**பு.** அவன் வராமெபோனு நாடகம் தீந்துது!—நடத்தவே முடியாது!—முடியுமா அப்பா?

**கோ.** முடியவே முடியாது! அவனெப்போலெ பெருமீசன் வேஷம் கட்ட இந்த ஆஸ்தானபுரத்திலேயே ஒருத்தரும் கெடையாது.

**பு.** வாஸ்தவம், தொழிலாளிங்களுக்குள்ளே அவனெப் போலே புத்திசாலி இந்த ஆஸ்தானபுரத்திலேயே கெடையாது.

**தா்.** ஆமாம்—அவனெபோலே ஒடம்பு டீக்கான ஆசாமி யாரும் கெடையாது, பாட ஆரம்பிச்சாண்ணு—காவாய்தான்!

**கோ.** கவாய் இண்ணு சொல்லப்பா—காவாயிண்ணு ரொம்ப தப்பான அர்த்தம்.

**சிசுநாகன் வருகிறான்.**

**சி.** அண்ணமாருங்களே! ராஜா கோயில்லேயிருந்து திரும்பி வர்ராரு. அவரோடேகூட இன்னம் ரெண்டு மூணு பேருக்குக்கூட கலியாணமாச்சி. நம்ப கூத்து மாத்திரம் நடந்திருந்தா — நம்பல்லாம் பணக்காருங்களா ஆயி இருப்போம்!

**பு.** ஐயோ! பாதம் நாய்க்கா! — உன் ஆயுசுவரைக்கும் தெனம் ஆறுகாசுகெடைச்சி இருக்குமே அப்பா வுனக்கு! கொறைஞ்ச பட்சம் ஆறுகாசு ஆவது கெடைச்சிருக்கும். எங்கப்பாணே நான் சொல்ரேன் —பெருமீசன் வேஷம் போடரத்துக்காக தினம் ஆறு காசு கொடுத்திருப்பாரு ராஜா! அவ்வளவு கொடுத்தாலும் அவனுக்கு தகுமப்பா! பெருமீசன் வேஷம் போடரது இண்ணு தினம் ஆறு காசுக்கு கொறைச்சலா வாங்கலாமா?

**பாதம் நாய்க்கன் வருகிறான்.**

**பா.** எங்கேடா இந்தப் பசங்கள்ளாம்? எங்கே இந்த சினேகிதருங்கல்லாம்?

**கோ.** பாதம் நாய்க்கா! பாதம் நாய்க்கா! — நம்ப அதிஷ்டமே அதிஷ்டம்!—நல்லநாளுடா நம்பளுக்கு!

பா. அடெ பசங்களா!—ரொம்ப ஆச்சரியமான சமாசாரம் ஒங்களுக்கெல்லாம் நானு சொல்லவேண்டிய திருக்குது!—ஆனு அது இன்னுதுண்ணு என்னெகேக்காதைங்க! இப்பொ சொல்லவேமாட்டேன் எங்கப்பாணே!—நானு நடந்ததெல்லாம் அப்படியே சொல்லிகினு வர்ரேன் கேளுங்க.

கோ. கொஞ்ச சொல்லப்பா கேப்போம் — என் ராஜா பாதம் நாய்க்கா!

பா. இப்போ ஒரு வார்த்தையும் சொல்லமாட்டேன்—இப்போ நானு ஒங்களுக்கு சொல்லப்போரதெல்லாம் —நம்ப ராஜா சாப்பிட்டாச்சி இண்ணுதான்! மின்னே உங்க வேஷ சாமான்களெ யெல்லாம் மூட்டெகட்டிங்க—தாடி மீசெங்களுக்கெல்லாம் கவுறுங்க சரியாயிருக்கட்டும், நெஜாருங்களுக் கெல்லாம் நாடா சரியாயிருக்கட்டும். எல்லாரும் அரமனெக்கி வந்து சேருங்க வுடனே—அவன் அவன் பாடத்தெ சரியா படிச்சிகினு ஏனிண்ணு—சுருக்கி சொல்லிவுடரேன், நம்ப ராஜா நம்ப நாடகத்தெ கேக்க பிரியப்பட்டிருக்கராரு. திரிசூலிக்கு பொடவெ கிழிச்சலில்லாமே யிருக்கட்டும். சிங்க வேஷம் போட்டுக்கிறவன் நெகத்தெ வெட்டிகவாணும்—ஏனிண்ணு நெகங்க சிங்க நெகம் போலே நீளமாயிருக்கணும் — செநேகிதருங்களே! கொஞ்சம் தயவுபண்ணி—இண்ணைக்கு மாத்திரம்—வெங்காயம் வெள்ளெப்பூண்டு சாப்பிடாதைங்க, நம்ப பேசரப்பொ நல்ல வாசனேவரணும், அப்பதான் அவுங்கல்லாம் நல்லகூத்து இண்ணு சொல்லுவாங்க —கப்சப்! பேசாதைங்க! இப்பொ போங்க! போங்க! அரமனேக்கி சீக்கிரம் வாங்க! வாங்க!

[எல்லோரும் போகிறார்கள்.]

**காட்சி முடிகிறது.**

## ஐந்தாம் காட்சி

**இடம்**—*தேசராஜன் அரண்மனை.*

**தேசராஜன், ஹேமலதா, லட்சுமிசந்திரன், ஹம்சிகா, தாமத்ரையன், ஹைரம்பி, பிலந்தரன், சேவகர்கள் வருகிறார்கள்.**

**தே.** *மணவினை முடிந்தபின், மணவிருந்தும் ஆயது; இனி நாம் மணப் பள்ளிக்குட் புகுமுன், தற் காலத்தை எவ் விதம் சந்தோஷத்துடன் கழிப்போம்? வேடிக்கை விநோதங்களை யெல்லாம் ஏற்படுத்தும் நமது மந்திரி, பேரானந்த அதிகாரி பிலந்தரன், எங்கே? இக்கடிந்து செல்லும் காலத்தைக் கழுப்பதற்கு, கதை, நாடகம், கேளிக்கை, ஏதேனும் இல்லையா? கூப்பிடு பிலந்தரரை.*

**பி.** *இதோ காத்திருக்கிறேன் மன்னர் மன்னனே.*

**தே.** *இன்று சாயங்காலம் பொழுதினைக் கடிதினில் கழிப்பதற்கு, என்ன விநோதம் ஏற்படுத்தி யிருக்கிறீர்? என்ன சங்கீதம்? என்ன கச்சேரி?*

**பி.** *சித்தமாயிருக்கும் விநோதங்களின் அட்டவணை இதோ இருக்கிறது. இதைப் படித்து மஹாராஜா அவர்கள் எதை முதலில் பார்க்க விரும்புகிறார்களோ தெரிவிக்க வேண்டுகிறேன்.*

[ஒரு கடிதத்தைக் கொடுக்கிறார்.]

**தே.** [படித்துக் கொண்டே] *"தேசிங்கராஜன் கதை, தம்பட்டத்துடன் தாராமங்கலம் வாலிபனால் பாடப்படும்"— இது வேண்டாம், இதை என் காதலிக்கு நான் என் முன்னோர்களைப்பற்றிக் கூறிய பொழுது சொல்லி யிருக்கிறேன்*—[படிக்கிறார்] *"விளமர் நகரத்துக் கூட்டத் தார் வெறி யாட்டம்"—இதை நான் இந் நாட்டை ஜெயித்து பட்டம் கட்டுக் கொண்ட காலத்தில், இள வயதிலேயே பார்த்திருக்கிறேன்.* [படிக்கிறார்] *"ஹரிச் சந்திர நாடகம் — மயான காண்டம் — பிள்ளையை உதைக்கிற பாகம்"—இது மிகவும் சோககரமானது— சந்தோஷமான கலியாணச் சடங்குகள் காலத்தில் பார்க்கத் தக்கதல்ல* [படிக்கிறார்] *"நீண்ட சுருக்கமான*

காட்சி—பெருமீசன் திரிசூலியின் காதல்—சோககர மான சந்தோஷம்!''—சந்தோஷம் சோககரமானது! நீண்டது சுருக்கமானது!—அதாவது கொதிக்கும்படி யான பனிநீர்! ஆச்சரியமான ஆலங்கட்டி மழைநீர்! இந்த எதிர் மொழிகளின் ஒருமைப்பாட்டை நாம் எப்படி கண்டறிவது!

பி. மஹாராஜா, இந்த நாடகத்தில் சுமார் பத்து வசனங் கள் தானிருக்கின்றன. இதைப் பார்க்கிலும் சுருக்க மான கதையை நான் கண்டதில்லை—ஆயினும் இதில் இருக்கும் இந்த பத்து வசனங்களே அதிகமானவை! ஆகவே இது அதிக நீளம்தான்—ஏனெனில், கதை முழுவதிலும் ஒரு வார்த்தையும் பொறுத்தமானதா யில்லை! ஒரு நடிகனாவது தக்கபடி யில்லை! சோககர மானது என்பதென்னவோ மெய்தான்—ஏனெனில், பெருமீசன் இதில் தற்கொலை செய்து கொள்ளுகிறான், அதை அவர்கள் ஒத்திகை செய்தபொழுது நான் பார்த்தபொழுது என் கண்களினின்றும் கண்ணீர் தாரை தாரையாக வந்தது!—சிரிப்பினால்! இவ்வாறு நான் ஆநந்த பாஷ்பம் என்றும் சொரிந்ததில்லை!

தே. இதை ஆடும் நடிகர்கள் யார்?

பி. நமது ஆஸ்தான புரத்தில் வேலை செய்யும் தொழிலாளி கள். அவர்கள் இது வரையில் தங்கள் மூளைகளுக்கு வேலையே கொடுத்தவர்களல்ல—தங்களுடைய கலியா ணச் சடங்கிற்காக, அவர்கள் மூளைகளுக்கு கஷ்டம் கொடுத்திருக்கிறார்கள்.

தே. ஆனால் அதைக் கேட்போம் நாம்.

பி. மஹாராஜா, தாங்கள் பார்க்கும்படியாக அவ்வளவு உசிதமாயிராது. அதை நான் முற்றிலும் கேட்டிருக் கிறேன். அது ஒன்றுக்குமே உதவாதது—இவ்வுல கில் அவர்கள் உங்கள் மனதை ஏதோ திர்ப்தி செய்ய வேண்டுமென்று கஷ்டப்பட்டு இதை ஒத்திகை செய் திருக்கிறார்கள், என்பதினால் மாத்திரம், உங்கள் மனம் சந்தோஷமடைவதானால், தாங்கள் பார்க்கலாம் இதை.

தே. நான் கட்டாயமாய் இக் கூத்தைக் கேட்கிறேன். பேதமையானது கடமையைச் செலுத்துவதானால்

அதல பெருங் குற்றம் ஒன்றும் இராது—போய் அவர்களை அழைத்து வாரும்—நீங்கள் எல்லோரும் உட்காருங்கள்.

[பிலந்திரன் போகிறான்.]

**ஹே.** அவர்கள் ஏதோ கஷ்டப்பட்டுக் கற்றதை நாம் நகைப்பதற்காகக் காண்போம் என்பது, என் மனதிற்குப் பிடிக்கவில்லை.

**தே.** என் பிரியே! நாம் அப்படி ஒன்றும் செய்வதை நீ பார்க்கமாட்டாய்.

**ஹே.** அவர்தான் கூறினாரே, அவர்கள் ஒன்றும் சரியாகச் செய்ய முடியாதென்று.

**தே.** ஒன்றும் சரியாகச் செய்யாததற்காக நாம் அவர்களுக்கு வந்தனம் அளித்தால், அது நமது பெருங் கருணையை அதிகமாய்க் காட்டும். அவர்கள் செய்யும் குற்றங்களைக் கண்டு நாம் நகைத்த போதிலும், அவர்கள் நமக்காக இவ்வளவு கஷ்டம் எடுத்துக் கொண்டார்களே யென்று நாம் சந்தோஷப் படுவோம்.

பிலந்திரன் மறுபடியும் வருகிறான்.

**பி.** மஹாராஜா அவர்கள் பராக்! சூத்திரதாரன் வருகிறான்.

**தே.** வரச்சொல் விரைவில்.

கோணகுபத்தன் சூத்திரதாரனாக வருகிறான்

**கோ.** [படிக்கிறான்]

பாலர்களாகிய நாங்கள்-ஏதோ எங்களுக்குத்தெரிந்த
தையாடிக் கட்டுகிறோம தைப்பெரியமனசு
பண்ணி நீங்கள்—ஏற்றுக்கொள்ளவேண்
டுகிறோம்—நாங்கள்ஆடும் ஆட்டத்தில் குற்றமே-
தேனுமிருந்தால் கனவான்களே நீங்கள் அன்
னப்பட்சியைப்போல்—பாலைப்பிரித்து நீரை
உட்கொள்
வீர்களென்று பிரார்த்திக்கிறோம தைப்பார்க்கநீங்
கள் வந்திருக்கிறது எங்களுக்கு மிகவும் திர்ப்தி
யைத் தருகிறது நாங்கள் உடனே நாடகத்தை ஆரம்
பிக்கப் போகிறோமாகையால் நீங்கள் சந்தோஷப்
படுவீர்
கள் சபையோர்களுக்கு நமஸ்காரம் செய்கிறேன்
நானே.

**தே.** இவனுடைய உபாத்தியாயர்—சுக்குமி, ளகுதி, பிலி என்று பிரிக்கக் கற்பித்திருக்க வேண்டும்.

**ல.** அர்த்தத்தை அறியாது எழுத்துக்களைக் கூட்டிப் படிக்கும் பள்ளிக்கூடத்துப் பையன் போல் படித்து விட்டான்.

**தே.** பிறகு என்ன?

**பெருமீசன், திரிசூலி, மண்சுவர், நிலாவெளிச்சம் சிங்கம் வருகிறார்கள்.**

**கோ.** கனவான்களே! இது என்ன காட்சி யென்று நீங்கள் ஆச்சரியப்படக் கூடும். ஆயினும் உண்மையை உரைத் திட்டால் அந்த ஆச்சரியம் போய்விடும்.

இவனை அறிய விரும்பினால் இவன் பெருமீசன் தான்.
கட்டழகியாகிய திரிசூலி கட்டாயமாய் இவள் தான்.
கல்லும் மண்ணும் கையில் வைத்திருக்கும்
இம்மனிதன் மண் சுவர்
காதலனையும் காதலியையும் கருணையின்றி பிரித்த
குட்டிச்சுவர்.
இந்தக் குட்டிக் சுவரில் ஒரு துவாரமிருக்கிறது
அதன் வழியாக காதலர்கள் பேசவேண்டி வருகிறது
இதைக்கேட்டு நீங்கள் ஆச்சரியப்படக்கூடாது
ஏனென்றால் எங்களுக்கு வேறு வழி கிடையாது.

முயலையும் விளக்கையும் வைத்துக்கொண்டிருக்கும் இவன் நிலா சந்திரன்—நாயனார் சமாதியருகில் காதலர் கள் சந்திக்கச் செய்தார்கள் தந்திரம்.

இந்த பயங்கரமான மிருகம் ஒரு சிங்கம்
அது முதலில் வந்த திரிசூலியை செய்தது பங்கம் அவள் ஓடும்பொழுது அவிழ்ந்து விழுந்தது அவள் முக்காடு அதைச் சிங்கம் வாயினால் கிழித்து செய்தது ரத்தக்காடு. பிறகு காதலனாகிய பெருமீசன் அங்கே வருகிறான்.
காதலியின் துணியில் ரத்தம் படிந்திருப்பதைக் காண் கிறான்,

உடனே வருத்தப் படுகிறான்
தன் கத்தியை உருவுகிறான்.

திடீரென்று குத்திக் கொள்கிறான்
படார் என்று கீழே விழுகிறான்
சடார் என்று உயிர் போகிறான்!

பிறகு மா மரத்தின் பின் ஒளிந்திருந்த மாது திரிசூலி

சட் என்று ஓடி வந்தாள்
பட்டென்று பிடுங்கினாள் கத்தியை
வெட் என்று மார்பில் குத்திக்கொண்டாள்—
உடனே உயிர் போய் விடுகிறது
கதையும் உடனே முடிவாகிறது!

இதை இனி, சிங்கம், நெலாவெளிச்சம், மண்ணாங்கட்டிச்சுவர், காதலர்கள், இதையெல்லாம் நடித்துக் காட்டுவார்கள், உங்களுக்கெல்லாம் தெரிவிப்பார்கள்!

[சூத்திரதாரன், பெருமீசன், திரிசூலி, சிங்கம், நெலா போகின்றனர்.]

**தே.** இந்த சிங்கம் ஒருவேளை பேசினாலும் பேசும் போலிருக்கிறதே!

**தா.** அரசே! அதில் ஒன்றும் ஆச்சரிய மிராது. அநேகம் கழுதைகள் கத்தும் பொழுது ஒரு சிங்கம் பேசக் கூடாதா என்ன?

**மண்சுவர்.** [பாடுகிறான்.]

நான் தகரக்கடை தம்பட்டன்
ஜாதியில் அசல் அம்பட்டன்
தற்காலம் கதையில் மண் சுவர்
காதலர்கள் சந்திக்கும் குட்டிச் சுவர்
என் மத்தியில் இருக்கிறது ஒரு ஓட்டை
அதுதான் காதலர்கள் பேசப்பாட்டை
என்கையிலிருப்பது மண்ணாலான செங்கல்
அதனால் நான் மண் சுவரென அறியுங்கள்
ஓட்டையின் இருபுறம் நின்று அவசியம்
காதலர்கள் பேசவேண்டியது ரகசியம்!

**தே.** இதைவிட எந்த மண்ணாங்கட்டியாவது, நன்றாய்ப் பேசுமா?

தா. ஏதோ கேட்டால் குட்டிச்சுவர் என்கிறார்களே—அக் காரணம் பற்றிதான் காதலர்கள் இங்கு வரப் போகிறார்கள் போலிருக்கிறது.

தே. பொறுங்கள்! பெருமீசன் சுவரருகில் வருகிறான்.

பெருமீசன் குட்டிச் சுவரிடம் வருகிறான்.

பெ. வெளிச்சமில்லா இருளே — கருப்பாயிருக்கும் பொருளே! கருப்பாயிருக்கும் பொருட்டே — கவின் பெரும் இருட்டே!

திரிசூலி சொன்னதை மறந்தனளே!
என்னைக் கைவிட்டுத் துறந்தனளே!

அழகிய செங்கல் சுவரே! அழகிய மண்சுவரே! எங்கள் இருவர் நிலங்களுக்கும் இடையில் இருக்கும் கற்சுவரே! உன் பிளவைக் கொஞ்சம் காட்டு—இதோ பாடுகிறேன் ஒரு பாட்டு.

[சுவர் இரண்டு விரல்களைக் காட்டுறது.]

பெ. [பாடுகிறான்.]

ஹா! உனக்கு கோடி வந்தனம்
என் இருகையால் தந்தனம்
ஹா! என்காதலியைக் காணேனே
மோசம் தான் போனேனே!
மட்டி சாம்பிராணியாகிய குட்டிச்சுவரே!
என்மதியை மயக்கிட உனக்கென்ன பவுரே!

தே. குட்டிச்சுவருக்கு புத்தி யிருப்பதானால், திட்டவேண்டும் திருப்பி.

பெ. அப்படி கூடாதுங்க மஹாராஜா! என்னபவுரே, என்று நான் சொன்னவுடன், திரிசூலி வரவேணுங்க —இப்போ வரப்போறா பாருங்க! அவளை நான் இந்த சுவத்தின் பிளவு வழியாகப் பார்க்கப் போகிறேன்—நான் சொன்னபடியே நடக்கப் போகிறது பாருங்க!—அதோ அவள் வர்றாள்! [திரிசூலி வருகிறாள்.]

தி. சுவரே! சுவரே! குட்டிச்சுவரே! மண்ணுங்கட்டிச் சுவரே! என்காதலனிடமிருந்து விண்டு, உன்னை நான் கட்டிக் கொண்டு, எத்தனைமுறை அழுவேனோ,

என்னை நீ அறியாயோ! கல்லாலும் மண்ணுங்கட்டியாலும் கட்டப்பட்ட உன்னை — என்கனி வாயால் எத்தனை முறை முத்த மிட்டிருக்கிறேன் பின்னே !

பெ. ஒரு இனியகுரல் என் கண்ணிற்படுகிறது
ஓட்டையருகில் ஓடிப்பார்க்கிறேன்.
என்காதலியின் கருவிழிகள்—என்காதில்
படுகிறவாவென்று நாடிப் பார்க்கிறேன்,
—திரிசூலி!

தி. நீர்தான் என் காதலன் — என்று நான் நினைக்கிறேன்.

பெ. ஆம் நான் உன் காதலனே! நீ என்ன நினைத்த போதிலும் அரைச்சந்திரன் பொய் பேச மாட்டான் வாதிலும்!

தி. அப்படியே நான் உன் சந்திரமதி
அடி யானைக்கொன்றாலும் தலைவிதி!

பெ. பரமசைவமாகிய நான் பார்வதியைவிட்டுப் பிரியேன்.

தி. பார்வதியாகிய நான் பரமசைவத்தை விட்டுப் பிரியேன்.

பெ. இந்தப் பிளவின் வழியாக
எனக்கொரு முத்தம் தருவாயாக!

தி. இந்த மண்ணுங்கட்டியை முத்தம் கொடுக்கிறது
என் தன் வாய் நிரம்ப களிமண் வருகிறது!

பெ. நாயினுவின் சமாதியருகில் உடனே என்னைவந்து சேர்!

தி. உயிர் வந்தாலும் போனாலும் அப்படியே செய்கிறேன் பார்! [பெருமீசனும் திரிசூலியும் போகிறார்கள்.]

சுவர். செவுராகிய என் வேலை முடிந்தது!
ஆகவே இது வீட்டுக்கு நடந்தது! [போகிறது]

தே. சுவர் தான் போய்விட்டதே, இனி காதலர்கள் இங்கேயே தாராளமாய்ச் சந்திக்கலாமே ?

ஹே. இதைப்பார்க்கிலும் ஆபாசமான நாடகத்தை நான் பார்த்ததேயில்லை!

தே. இதோ இரண்டு சிரேஷ்டமான மிருகங்கள் வருகின்றன—சிங்கமும் மனிதனும்!

சிங்கமும், நெலவும் வருகின்றன.

சி. மாது சிரோமணிகளே
மனமிளகிய நாரீமணிகளே!
பயங்கரமான சிறிய
தரையினில் ஓடும் பெரிய
சுண்டெலியினைக்கண்டு
சும்மா பயந்திடும்—சீமாட்டிகளே!
அங்கமெல்லாம் நடுங்கிட கர்ஜிக்கும்
சிங்கத்தின் சப்தத்தினைக் கேட்டு
ஒருகால் நீங்கள் பயப்படாதபடி
இதைச் சொல்கிறேன் இப்படி—
என் மேலிருப்பது சிங்கத்தின் தலை
இதை வாங்கினேன் கொடுத்து அதிக விலை!
சிங்கமல்ல எனக்கு அச்சன்
நான் சிசுநாகத் தச்சன்!
வாஸ்தவமாக வந்தால் சிங்கமாய்
என் உயிர் உடனே போம் பங்கமாய்!

தே. இந்த சிங்கம் மிகவும் சாதுவான ஜந்து—பழிபாவத்திற்கு மிகவும் அஞ்சுவது!

ல. தைரியத்தில் இந்த அரி—நரிதான்.

தே. குள்ளநரிக்கு—உள்ள தைரிய முடையது!—அதிருக்கட்டும்—இனி நிலவு சொல்வதைக் கேட்போம்.

நெலா. இந்த விளக்கானது சந்திரபிம்பம்
நான் அந்த சந்திரனைத் தாங்கும் கம்பம்.

தே. அப்படியானால் இவன்தான் பரமசிவம்—ஆனால் இந்த விளக்காகிய சந்திரனைத் தலையில் தரிக்கவேண்டும்—கையில் தரிக்கலாகாது.

தா. அந்த விளக்கிலிருக்கும் மெழுகுவத்தி உருகி அவன் தலையில் விழுந்தால் என்ன செய்வான் பாவம்!

ஹே. இந்த சந்திரனைப் பார்க்க என்மனம் பிடிக்கவில்லை—இவனைச் சீக்கிரம் போகச் சொல்லுங்கள்.

**தே.** அது மரியாதையாகாது — அவன் பேசுவதை யெல்லாம் நாம் கேட்டுத்தான் ஆக வேண்டும்.

**ல.** அப்பா சந்திரனே! பேசு—நீ பேசவேண்டியதை யெல்லாம் சீக்கிரம்!

**நெலா.** நான் பேசவேண்டிய தெல்லாம்—

இந்த விளக்கு நெலா தான்
அதைப் பிடிக்கும் மனிதன் நான்

**தா.** சரியான வேலையாள்!—பொறுங்கள்!—இதோ திரிசூலி வருகிருள்.

**திரிசூலி மறுபடி வருகிருள்.**

**தி.** இது தான் நாயினு சமாதி!—என் பிராணநாத்! எங்கே?

**சிங்கம்.** ஓ ஓ ஓ ஓ ஓ!

[கர்ஜிக்கிறது—திரிசூலி ஓடிப்போய் விடுகிருள்.]

**தா.** நன்ருய்க் கர்ஜித்தது சிங்கம்!

**தே.** நன்ருய் ஓடினுள் திரிசூலி!

**ஹே.** நன்ருய்ப் பிரகாசித்தது நெலா!—நிலவு என்ன சந்தோஷமாய்க் காய்கிறது பருங்கள்!

[சிங்கம் திரிசூலியின் அங்க வஸ்திரத்தைக் கிழித்தெறிந்து விட்டுப் போகிறது.]

**தே.** அழிப்பது எலியைப்போல், கிழித்தது துணியை சிங்கம்!

**தா.** கிழித்துவிட்டுத் துணியை மறைத்து விட்டது சிங்கம்!

**ல.** ஆதலால் காதலன் பெருமீசன் கடிந்து வருகிருன்!

**பெருமீசன் மறுபடி வருகிருன்.**

**பெ.** அழகிய நெலாவே! சூரியன் போன்ற உன் கிரணங்களுக்கு வந்தனம், இவ்வளவு பிரகாசமாய் பிரகாசிப்பதற்காக நமஸ்காரம் தந்தனம். கிருபையுடன் ஜொலிக்கின்ற உன் கிரணங்களின் ஒளி, என் காதலியின் முகத்தைப் பார்க்கக் காட்டும் எனக்கு வழி.

—பொறு! இதுவென்ன கோரம்!
நான் காண்பதென்ன கடூரம்!
ஹா! இருதயத்திற் பாரம்!
எப்படி நேர்ந்ததிக்குரூரம்?

ஹா! கண்ணின்மணியே—காதற்கிளியே!
உன் ஆடையானது சுத்தம்
படிந்திருக்கிறது ரத்தம்!
யமனே! நீ விரைவாய்
என் அருகில் வருவாய்!
என்னைக் கொன்று தின்று மென்றுவிடுவாய்!

**தே.** இதைப்பார்த்து, உடனே தன் ஆப்த நண்பன் மடிந்ததாக ஒருவன் கேள்விப்படுவானுயின்—அவனுக்கு துக்கம் வராமலிருக்குமா ?

**ஹே.** ஐயோ! பாபம்! இவனைப்பார்த்தால் எனக்கு பரிதாபமாயிருக்கிறது.

**பெ.** சிவமே! இந்த சிங்கத்தை யேன் படைத்தாய்!
என் காதலியைக் கொல்லவோ நினைத்தாய்!
இவ்வளவு—இல்லை இல்லை!—இப்படிப்பட்ட அழகிய பெண்மணியை
எந்த சென்மத்தில்
எந்த வுலகத்தில்
எந்த தேசத்தில்
எந்த ஊரில்
நான் மறுபடியும் காணப் போகிறேன்!
கண்ணீரே! நீ சொரிவாய்!
கத்தியே! நீ வெளிவருவாய்!
என் மார்பிற்குள் புகுவாய்!
—ஏ ஏ! இந்தபக்கம் அல்லா—இந்தப்பக்ம்தான் இருதயம் இருக்கிறது—ஆகவே—
[மறுபடியும் குத்திக்கொண்டு]
நான் மாள்கிறேன்!
மடிகிறேன்!
சாகிறேன்!

இதோ நான் என்னைக்குத்திக் கொள்கிறேன்
இதோ நான் கொன்று கொள்கிறேன்!
என் உயிர் போய்விட்டது!
ஆகாயத்தில் பறந்து விட்டது!
சுவர்க்கம் புகுந்து விட்டது!

சூரியன் இருண்டு விட்டது — சந்திரன் மருண்டு விட்டது! [நெலா போகிறது]

என் உயிர் போய்விட்டது! [சாகிருன்]

ல. ஐயோ! பவம்! எவ்வளவு கஷ்டப்பட்டு மடிந்தான்!

தே. ஆனல் ஒரு சிட்டிகை மூக்குத்தூள் போட்டால், எழுந்து உட்கார்ந்து கொள்வான்!

ஹே. திரிசூலி வருவதற்குள்ளாக நிலவு மறைந்து விட்டதே! அவள் எப்படி தன் காதலனைக் காண்பாள்?

தே. நட்சத்திரங்களின் வெளிச்சத்தினுல்! — இதோ வருகிருள்—அவளது துக்கத்துடன் நாடகத்தின் சோகம் தீரும்.

**திரிசூலி** மறுபடியும் வருகிருள்.

ஹே. இப்படிப்பட்ட பெருமீசனுக்காக அவள் அவ்வளவு துக்கம் காட்டல், தகாதென்று நினைக்கிறேன்.— அவள் அழுகை சுருக்கமாயிருக்குமாக!

தா. பெருமீசன் கெட்டிக்காரனு, திரிசூலி கெட்டிக்காரியா, என்று நம்மால் சொல்வது மிகவும் கடினமாம். இப்படிப்பட்ட ஜன்மங்களை ஈசன் சிருஷ்டித்தாரே!

ல. தன் கடைக் கண்ணினுல் அவள் தன் காதலனைக் கண்டு விட்டாள்! இனி கணமும் தாமதிக்க மாட்டாள்!

தி. கண் உறங்குறீரா, என் காதலனே!—
மடிந்து விட்டாரா! இதென்ன பாதகமே!
எழுந்திருமே பிராண நாதா!
உமது களி வாயால் பேசலா காதா!

கோ. [உள்ளிருந்து] கனிவாயால்! கனிவாயால்!

தி. உமது கருமையான அதரத்தையும்
சிவந்த கண்களையும்
வில்லைப்போல் வளைந்திருக்கும்—மூக்கையும்—

கோ. [உள்ளிருந்து] புருவத்தையும்! புருவத்தையும்!—

தி. நான் எந்த ஜன்மத்தில் காணப்போகிறேன்—[திரும்பி] அப்புறம் என்னப்பா?

கோ. [உள்ளிருந்து] பாட்டு! பாட்டு!—முகாரியிலெ விருத்தம்.

தி. எனக்கு தொண்டே கட்டிகினு இருக்குதப்பா.

கோ. [உள்ளிருந்து] ஆறு வசனமா சொல்லிவுடு.

தி. பாதகம் என்றும் பாராமல் நீதான்
காதலனைக் கொன்றுவிட்ட கட்கமே!
ஆதலால் என் உயிரை அபகரிப்பாய்!
சாதலுக்கு நான் சற்று மஞ்சேனே?

[பெருமீசன் கத்தியின் உறையால் குத்திக்கொள்கிறுள்.]

தே. இப்படி சாவதற்கு ஒருவரும் அஞ்சவே வேண்டாம்.

பெ. [எழுந்து தன் கத்தியைக் கொடுத்து] இத்தாலெ குத்தி கடா தடியா!

தி. இதோ கத்தி வருகிறது!
நான் சாகிறது
என் உயிர் போகிறது! [சாகிறுள்.]

ஹே. பெருமீசன்தான் எழுந்து விட்டானே! அவனை உடனே கலியாணம் பண்ணிக்கொள்ளக் கூடாதா பாவம்!

தே. இனி நெலாவும் சிங்கமும் இவர்களைப் புதைக்கவேண்டும் போலும்.

தா. மண்சுவர் கூட!

பா. [எழுந்திருந்து] இல்லேங்க! அப்படி இல்லேங்க! — இந்த ரெண்டு குடும்பத்தையும் பிரித்த செவுரு பூட்டுதுங்க —இனி நாந்திபாடி—அப்பறம் மங்களம் பாடணும்.

ல. இரண்டு பெயர் இறந்ததற்காக ஒரு நாந்தியாவது பாட வெண்டாமா ?

தே. செ! நாந்திவேண்டாம் — நீங்கள்தான் சந்தோஷமாய் மடிந்து விட்டீர்களே! இதற்கு நாந்தி என்னத்திற்கு?— மங்களம் பாடுங்கள் எல்லோரும்!

[நடிகர்கள் மங்களம் பாடுகிருர்கள்.]

காட்சி முடிகிறது.

---

நாடகம் முற்றிற்று.

# சங்கீதப் பயித்தியம்

## நாடக பாத்திரங்கள்

| | | |
|---|---|---|
| சங்கீதாநந்தர் | .... .... | ஒரு சன்யாசிப் பாடகர் |
| சங்கரன்<br>பரசுராமன் | .... ... | இரண்டு தாயாதிகள் |
| காவேரி அம்மாள் | .... .... | சங்கரன் மனைவி |
| காந்தாரி அம்மாள் | .... .... | பரசுராமன் மனைவி |
| வசந்த ராயர் | .... .... | தேரடியூர் அரசர் |

*வெட்டியான், தெருப் பள்ளிக்கூடத்து உபாத்தியாயர், சட்டாம் பிள்ளை, சிறுவர்கள், படைத் தலைவர், படைவீரர்கள், பீடா விற்கிறவன், பால் மிட்டாய் விற்கிறவன், கறிகாய்க்காரி, துடப்பம் விற்கிறவள், கொத்தவால், கட்டியக்காரன், மந்திரி,*
:: :: *முதலியோர்.* :: ::

கதை நிகழிடம்—தேரடியூர்.

# சங்கீதப் பயித்தியம்

## முதல் அங்கம்

### முதற் காட்சி

இடம்—தேரடியூரில் கடை வீதி.

வெட்டியான் தமுக்கடிக்கிறுன், ஜனங்கள் சேர்கின்றனர்.

**வெ.** இதனுல் சகலமான பேர்களுக்கும், தெரிவிக்கும்படியான இவ்வூர் அரசரது ஆக்கினை என்னவென்ருல்—"அரசருடைய தாயார் அந்திய காலத்தில் சங்கீதம் கேட்க வேண்டுமென்று பிரியப்பட்டபோது, ஆஸ்தான சங்கீத வித்வான் வந்து சேருமுன், அவர்கள் உயிர் போய்விட்டபடியால், அந்த ஆத்மாவின் பிரீதிக்காக, இன்று முதல் ஒரு வருஷ காலம் வரையில், இவ்வூரிலுள்ள எல்லா ஜனங்களும், சங்கீதத்திலேயே சம்பாஷிக்க வேண்டும். இவ்வூரின் பெயரும் தேரடியூர் என்பதிலிருந்து தோடியூர் என்று மாற்றப்பட்டது. அரசரும் தன் பெயராகிய வசந்த ராயர் என்பதை வசந்த ராக ராயர் என்று மாற்றிக்கொண்டார். அப்படியே எல்லோரும் எல்லாப் பெயர்களையும் மாற்றிக்கொள்ள வேண்டியது. ஆண்பெண் குழந்தைகள் உட்பட எல்லோரும் சங்கீதத்திலேயே சம்பாஷிக்க வேண்டியது. இந்த ஆக்கினையை மீறி நடப்பவர்களுக்கு ஒவ்வொரு குற்றத்திற்கும் பத்து பணம் வரையில் அபராதம் விதிக்கப்படும்."—திடும் திடும் திடும்! [ஜனங்கள் கூக்குரலுடன் கலைகின்றனர்.]

காட்சி முடிகிறது.

# இரண்டாவது காட்சி

**இடம்—ஒரு தெரு பள்ளிக்கூடம்.**

**பிள்ளைகள்** *நிற்கின்றனர்.* **உபாத்தியாயர் வருகிறார்.**

**உ.** *அடே பசங்களா! இதென்னுடா பெரிய எழவா போச்சி! இது வரைக்கும் சொன்னமாதிரி பாடம் சொல்லக் கூடாதாம், புது மாதிரியிலே சொல்லணுமாம், இல்லாப்போனு அபராதம் விழுமாம்—உம்—என்னு செய்யரது! ராஜா ஆக்கினெ, மீறக்கூடாது—நான் சொல்ரபடியே பாடம் சொல்லுங்கள்.*

[பாடுகிறார்.]

**ராகம்—தன்யாசி—தாளம்—ஆதி**

**பல்லவி**

*அ ஆ, இ ஈ, உ ஊ, எ ஏ,*
*ஐ, ஒ ஓ ஔ-*

[பிள்ளைகள் அப்படியே பாடுகின்றனர்]

**அனுபல்லவி**

*கக் கா, கிக் கீ, குக் கூ, கெக் கே,*
*கை, கொக் கோ, 'கௌ,*

**சரணங்கள்**

*சச் சா, சிச் சீ, சுச் சூ, செச் சே,*
*சை, சொச் சோ, சௌ,*
*தத் தா, தித் தீ, துத் தூ, தெத் தே,*
*தை, தொத் தோ, தௌ.*

[பிள்ளைகள் அப்படியே பாடுகின்றனர்.]

**சட்டாம்பிள்ளை விரைந்து வருகிறான்**

**ச.** *சாமி! சாமி!—உங்க—*

**உ.** *அடெ பையா! சொல்லவேண்டியத்தெ பாட்டா சொல்லு, இல்லாப்போனு உனக்கும் எனக்கும் ரெண்டு பேருக்கும் அபராதம் விழும்!*

**ச.** உங்க இஷ்டம் [சவுக்கமாகப் பாடுகிறான்]

**ராகம்—காம்போதி—தாளம்—ஆதி**

**பல்லவி**

*வாத்தியாரே உங்கள் வீட்டில்—ஐயோ!*

உ. என்னுடா வீட்டிலே? யாருக்கென்ன உடம்பு? யாருக்காவது அசௌக்கியமா என்ன?

ச. இல்லை! இல்லை! [பாடுகிறுன்]
வாத்தியாரே—உங்கள் வீட்டில்—குதிரை!

உ. குதிரை என்ன! ஓடிப்பூட்டுதா என்ன-சீக்கிரம் சொல்லுடா!

ச. இல்லை! இல்லை! [பாடுகிறுன்]
வாத்தியாரே உங்கள் வீட்டில் குதிரை—
கொட்டகை—

உ. கொட்டகையா!— அது ரொம்ப பழசு—பிரிச்சுடணும் இண்ணு இருந்தெ, என்ன அதுக்கு?

ச. [பாடுகிறுன்.]
வாத்தியாரே—உங்கள் வீட்டில்—குதிரை
கொட்டகை தீ பற்றியது!

உ. ஐ ஐயோ! அத்தெ முன்னெயே 'சொல்லி யழக்கூடாதா! அப்புறம் என் வீடுகூட பத்திக்கொண்டால்!—பாழும் சங்கீதம்!—வாங்கடா பசங்களா!
[உபாத்தியாயர் ஓடுகிறுர். பிள்ளைகள் பின் தொடர்கின்றனர்]

**காட்சி முடிகிறது**

---

## மூன்ருவது காட்சி

**இடம்**—*அரசரது சைனியம் கபாத் பழகும் வெளி.*

**படைத்தலைவர்** வருகிறுர், பிறகு **படைவீரர்கள்** வருகின்றனர்.

ப.த. நட பைரவ்!—ஏக்தாள்! [வீரர்கள் நடக்கின்றனர்.]
நீல்—ஆம்பரி! [வீரர்கள் நிற்கின்றனர்]

ப.த. இப்பொழுது கமாஸ் (கபாத்) பழகுவோம்.
ஆரோஹண்! [கைகளைத் தூக்குகின்றனர்.]
அவரோஹண்! [கைகளை இறக்குகின்றனர். இப்படி மூன்று முறை செய்கின்றனர்.]

ப.த. கை சுருட்டி! ஆதி தாளம்—ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு—ஐந்து,ஆறு,ஏழு,எட்டு! [இப்படி மூன்று முறை]

**ப. த.** *தோடிராகம்!* [வீரர்கள் துப்பாக்கிகளைத் தோளில் ஏந்து கின்றனர்.]

**ப. த.** *பிரசண்டமாருதம்!* [வீரர்கள் துப்பாக்கிகளை முன்னால் ஏந்துகின்றனர். இப்படி மூன்று முறை செய்கின்றனர்.]

**ப. த.** *முத்தாயிப்பு!* [முடிவு] *பூர்பிளாஸ்!* [போகின்றனர்.]

---

## நான்காம் காட்சி

இடம்—*கடைத் தெரு,*

**பீடா விற்கிறவன்** *பாடிக்கொண்டு வருகிருன்.*

**பீ. வி.** **ராகம்—கலாநிதி—தாளம்—ஆதி**

**பல்லவி**

*பீடா வாங்கலையோ பெருஞ்சீமான்களே*
*பீடா வாங்கலையோ!* (பீ)

**அனுபல்லவி**

*தேடாமல் வருகிறது தெருவிலே*
*திவ்யமான பீடா இதுதான் உருவிலே*

**பால் மிட்டாய்க்காரன்** வருகிருன்.

**பா. மி.** [பாடுகிருன்.] *பால்மிட்டாய், பன்னீர்மிட்டாய், பலே ஜோர்மிடாய், பலேபசந்த் மிடாய், காலணா மிடாய், கைமேல் மிடாய், கோவா மிடாய், கோதம் மிடாய்!*

**கறி காய்க்காரி** வருகிருள்,

**க.** **ராகம்—தோடி—தாளம்—ஆதி**

**பல்லவி**

*கத்தரிக்காய் வற்றல்—வாங்கலையோ*

ஒரு **வழிப்போக்கன்** வருகிருன்.

**ஓ. வ.** **ராகம்—தோடி—தாளம்—ஆதி**

**பல்லவி**

*எத்தனை கொடுப்பாய்—துட்டுக்கே*

**அனுபல்லவி**

**க.** *ஒன்று, இரண்டு, மூன்று, நாலு, ஐந்து,*
*ஆறு, ஏழு, எட்டு—* (க)

அனுபல்லவி

ஒ. வ. மொத்தவிலே, அதிகவிலே, கொஞ்சம்குறை—

துடப்பம் விற்கிறவள் வருகிறாள்.

து: துடப்பம்! துடப்பம்!

கொத்தவால் விரைந்து வருகிறான்.

கொ, ஏய்! துடப்பம்—வா இப்படி!

து. ஏன் சாமி!

கொ. வா, டாணுவுக்கு!

து. ஏன் சாமி!

கொ. இவ்வூர் சட்டம் தெரியாதோ உனக்கு?

து. தெரியாது சாமி!

கொ. தெருவுலெ யார் என்ன பேசனாலும் சங்கீதத்தோடு பேசணும்.

து. அப்படி இண்ணு?

கொ. பாட்டா பாடணும்.

து. எனக்கு பாடத் தெரியாதே சாமி, துடப்பக்கட்டைக்குக் கூடவா பாடணும்?

கொ. ஆமாம்! அப்படித்தான் ராஜா உத்திரவு, இல்லா போனா தெருவுலே விக்கக்கூடாது.

து. எனக்குத் தெம்மாங்குதான் தெரியுங்க.

கொ. ஆனால் அதுலே பாடு.

து. [பாடுகிறாள்.]

துடப்பக்கட்டே ராஜ்யத்துலே
துடப்பக்கட்டே விக்கக்கூட
துடப்பக்கட்டே பாடணுமாம்
துடப்பக்கட்டே! துடப்பக்கட்டே!

கொ. ஆ!—சரி!—போ போ!

காட்சி முடிகிறது.

# இரண்டாம் அங்கம்

## முதற் காட்சி

இடம்—முட்டுசந்து—இரண்டு பக்கமும் இரண்டு வீடுகள்.
சன்யாசி உடையில் சங்கீதானந்தர் பாடிக்கொண்டு வருகிறார்.

**ராகம்—பைரவி—தாளம்—ரூபகம்**

**பல்லவி**

**சன்.** சங்கீதத்தினும் சுகம்யாதே
சர்வலோகத்திலும் கிடையாதே (ச)

**அனுபல்லவி**

அங்கமெலாம் குளிருமே ஆனந்தமதனாலே
எங்குமிதற்கு நிகர் ஏதுமில்லை சொன்னாலே.(ச)

**சங்கரனும் பரசுராமனும்** எதிர் எதிர் வீடுகளிலிருந்து
ஓடி வருகிறார்கள்;

**இருவரும்.** சாமி! சாமி! நமஸ்காரம். [பாதத்தில் வீழ்கிறார்கள்]

**சன்.** யாரப்பா நீங்கள்? நான் ஒரு ஏழை, எனக்கேன் இப்படி நமஸ்காரம் செய்கிறீர்கள்?

**இருவரும்.** நீங்கள் தான் எனக்கு குருவாயிருக்கணும்!

**சன்.** நான் உங்களுக்கு குருவாயிருப்பதா! எனக்கொன்றும் அர்த்தமாக வில்லை.

**இருவரும்,** நான் சொல்ரேன் கேளுங்க சாமி!

**சங்.** அடே! பரசு! நான் பெரியவன்! நானு முன்னே சொல்ரேன்.

**பர.** ஏய்! சங்கராபரணம், நீங்க பெரியவரானா உங்கமுட்டுக்கும் இருக்கட்டும்! நான் முன்னே சொல்ரேன் சாமி!

**சன்.** இதென்னடா அப்பா!—சங்கராபரணம்! பரசு!—ஏனப்பா, உங்கள் பேர்களா இவைகள்?

**சங்.** நான் சொல்ரேன் சாமி!—இந்த ஊர் ராஜா ஒருத்தர் இருக்கிறாரு.

**பர.** அவருக்கு சங்தேப் பயித்தியம்!

**சங்.** அவர் என்னு ஆக்கினெ பண்ணியிருக்காரு இண்ணு—

**பர.** எல்லாரும், பேருங்களே, சங்கீத பேரா மாத்திகணும் இண்ணு—உத்திரவு பண்ணி இருக்கிருரு.

**சங்.** அத்தொட்டு, சங்கரன் என்ற என் பெயரெ சங்கரா பரணம் இண்ணு மாத்திகனேன்.

**பர.** எம்பேரு பரசுராமன், நான் பரசு இண்ணு மாத்திக னேன்

**சன்.** ஆமாம், இப்பொழுது என்னை என்ன கேட்கிறீர்கள்?

**சங்.** அவரு—எங்க ராஜா—வீட்டுக்கு வெளியே யார் என்ன பேசனுலும் சங்கீதத்தோடு பேசணும், இல்லாப்போனு அபராதம் போடப்படும், இண்ணு தண்டோரா அடிச்சி யிருக்கராரு—எனக்கென்னமோ சங்கீதம் அவ்வளவா வராது.

**பர.** அவ்வளவா வராதென்னு—அவர் தொண்டையெ கிழிச்சாலும் ஒரு சொரம்கூட சரியா வராதுங்க—

**சங்.** உனக்கு மாத்திரம் சங்கீதம் ரொம்ப தெரியுமோ? உன்னெ சுட்டு போட்டாலும் தாளமே வராதே!

**சன்.** இதற்கு என்னை யென்ன அப்பா செய்யச் சொல்கிறீர் கள் ?

**இருவரும்.** என் ஊட்டுக்கு வந்து எனக்கு வாத்தியாராயிருந்து கொஞ்சம் சங்கீதம் கத்துக் கொடுக்கணும் சாமி!

**சன்.** உம்—அப்படியேஆகட்டும்; ஏதோ எனக்குத் தெரிந் ததைச் சொல்லிக் கொடுக்கிறேன்—வாருங்கள்.

**சங்.** சாமி! என் ஊட்டுக்கு முன்னே வரணும்.

**பர.** சாமி! என் ஊட்டுக்கு முன்னே வரணும்.

**சங்.** நான் தானே முன்னே கூப்பிட்டேன்.

**பா.** நானு உங்களை முன்னேயே கூப்பிடலாமிண்ணு இருந்தேன்.

(இருவரும் சன்யாசியை இழுக்கிருர்கள்.)

**கொத்தவால்** வருகிருன்.

**கொ.** சங்கீதம்! சங்கீதம்! சங்கீதம்!

**சங்.** [பாடுகிருன்.]

வாருங்களையா டாணுகாரரே!
தீருங்களையா எங்கள் சண்டையை!
பாருங்களையா என் வீட்டிற்கு பரதேசி
போகக்கூடாதென்று தடுக்கிருன்.

பா. கூறுங்களையா நீர் தான் நியாயம்
கும்பிட்டு நான் இவரை முன்பழைத்தேன்
தாறுமாருய் உளறுகிருர்
தடியாம்பிள்ளை இவர் தானையா

சங். ஏண்டா கொழுப்பொ!(இருவரும் அடித்துக்கொள்கின்றனர்.)

கொ. பொறுங்கள்! பொறுங்கள்! [அவர்களைப் பிரித்து] —தாளம் தப்பு!—தப்பு!—நான் தாளம் போடுகிறேன் அதற்குச் சரியாக அடித்துக் கொள்ளுங்கள்! [ஜம்பை தாளம் கையில் போடுகிருன்.]

சங். ஏனையா—நாங்க சண்டை போட்டா—

பர. உங்களுக்கு அது வேடிக்கையா யிருக்குதோ?

கொ இல்லெடாப்பா! ராஜா ஆக்கினெ! அடி தடில் உழுந்தாலும் தாளத்தோடெ இருக்கணும்!-இல்லாப்போனு அரமனைக்கு இழுத்துகினு போயி அபராதம் போட்டு வைக்கணும்!

சங். சரிதான்! அபராதம் குடுத்தது போதும்—

பர. நாங்க சமாதானமா போரோம்.

இருவரும். நீங்க சொல்லுங்கையா மத்யஸ்தம்—யார் ஊட்டுக்கு பாட்டு வாத்தியார் போவணும் முன்னே.

கொ. உம்—நீதான் பெரியவன்—நீஅழைச்சிகினு போ முன்னே.

பர. சரிதான் இருக்கட்டும்—அப்பறம் நானு அழைச்சிகினு போறேன். [சங்கரன் சன்யாசியைத் தன் வீட்டுக்கு அழைத்துக் கொண்டு போகிருன்.]

**காட்சி முடிகிறது.**

---

## இரண்டாம் காட்சி

இடம்—சங்கரன் வீட்டில் கூடம்.

**சங்கரன் வருகிருன்.**

சங். சாவேரி!—சாவேரி!

**காவேரி அம்மாள் அடுப்பங்கரையிலிருந்து வருகிருள்.**

கா. இதோ வந்தேன்—இதென்ன இது! என்பெயரெச் சொல்லி கூப்பிடுங்களேன்! சாவேரி என்னு வந்தது! சாவேரி!

சங். இல்லெடி, உம்பேரெசொல்லி காவேரி இண்ணு கூப்பிட்டதுக்குத்தான், நேத்து ஒரு பணம் அபராதம் விழுந்துதெ! மகாராஜா கட்டளெ, எல்லா பேருங்களும் சங்கீத பேருங்களா இருக்கணும் இண்ணு.

கா. அதெல்லாம் வீட்டுக்கு வெளியே! உள்ளே எப்படியாவது பேசிக்கலாமில்லெயா! யார் கேக்கப்போரா?

சங். அப்பறம் இந்தப்பழக்கம் தானே தெருவிலேயும் வரும் இண்ணு, இப்பவே பழகி வைக்கரேன்!—சமையல் முடிஞ்சுதா?

கா. இல்லெ, இன்னும் அரைநாழி ஆகும்.

சங். குருமகாராஜா ஸ்நானத்துக்குப் போயிருக்கிராரு; சீக்கிரம் சமையல் எல்லாம் முடிச்சூடு. [காவேரி உள்ளே போகிருள்] அதுவரைக்கும் ஜன்டெவரிசெ பாடம் பண்ணி வைப்போம்—சா சா சா சா சா—

காவேரி வருகிருள்.

கா. இதென்னு இது? சா சா சா!—வெள்ளிக் கெழமெ சுபமா ஏதாவது சொல்லக்கூடாதா!

சங். சா சா சா சா!

கா. யாரெ சாவச்சொல்ரைங்க ?

சங். நீ நீ நீ நீ !—

கா. என்னது ?—என்னெயா சாவச்சொல்ரைங்க ?

சங். தா தா தா தா!

கா. எங்க தாதர்வைய்யா?

சங். பா பா பா பா!

கா. யாரெ ஒணு முண்ணூலும் சொல்லுங்க, பாபாவே மாத்திரம் அப்படிச் சொல்லாதைங்க!

சங். மா மா மா மா!

கா. இதென்னுடி இது! எங்கமாமாவெபத்தி அப்படிச் சொன்னு எனக்கு கோவம் வரும்!

சங். கா கா கா கா!

கா. ஆ!—அப்படி காக்காயே ஒணும் இண்ணு, என்னுவோணு மிண்ணூலும் சொல்லுங்க.

**சங்.** இல்லெடி இதெல்லாம் ஜன்டெவரிசெ, குருமஹா ராஜா கத்து கொடுத்தாரு கொஞ்சமுன்னே.

**கா.** என்னு ஜன்டெ வரிசையோ கிண்டல் வரிசையோ! காது புளிச்சிப் போறது. [உள்ளே போகிருள்]

**சங்.** அப்புறம் என்னு?—அந்தப் புஸ்தகத்திலே எழுதி வைச்சேனே! [அதை எடுத்துப் பார்த்து] சானி சானி சானி சானி—நிதா நிதா நிதா நிதா—அப்பறம் தப தப தப தப!

**காவேரி** மறுபடி வருகிருள்.

**கா.** இதென்னுடி எழவாயிருக்குது! தப தப இண்ணுகினு! போதும் நீங்க சங்கீதம் கத்துகிறது, நிறுத்துங்க! [உள்ளே போகிருள்.]

**சங்.** மாங்கா—மாங்கா—மாங்கா—காரி—காரி—காரி—மாங்காகாரி—மாங்காகாரி—மாங்காகாரி!

**கா.** [வெளி வந்து] ஏம் மாங்காகாரியே கூப்பிடரைங்களே!

**சங்.** இல்லேடி—வாத்தியார் காலமே பாடம் எழுதிகொடுத்தாரே—மாங்கா—காரி—மாங்கா—காரி இண்ணு—

**கா.** மாங்காயும்—கறியும்—நல்ல வாத்தியாரு—நல்ல பாடம்!

**சங்.** அடி அடி! அவரெ திட்டாதே—அப்பறம் அவரு எதிர் வீட்டுக்கு—எம்பங்காளி ஊட்டுக்குப் பூடப்போராரு—நானு எவ்வளவு கஷ்டப்பட்டு இங்கே இழுத்துகினு வந்தே! [தெருவில் கதவைத் தட்டுகிற சப்தம்.]

—அதோதோ! வந்துவிட்டாரு! சீக்கிரம் சமையல் முடிச்சூடு.

**கா.** செய்யரேன், அவரெ இந்த சா சா நீ நீ தவிர ஏதாவது நல்ல ராகமா—பாட்டா கத்துகொடுக்கச் சொல்லுங்களேன்.

**சங்.** அப்படியே ஆவட்டும், நீ போயி சமயலெபாரு. [காவேரி உள்ளே போகிருள்.]

**சன்யாசி** வருகிருர்.

வாங்கசாமி, ஸ்நானம் எல்லாம் ஆச்சோ?

**சன்.** முடிந்தது அப்பா.

**சங்.** இப்படி உக்காருங்க—சாமி, இந்த சரளி வரிசெ ஜன்டெ வரிசையெல்லாம் ஒரு பக்கம் இருக்கட்டும். எம்பெண்சாதி நானு ஏதாவது பல்லவி கத்துகிணு மிண்ணு ஆசெ படரா, அத்தெ கொஞ்சம் முன்னே சொல்லிக்கொடுங்க.

**சன்.** அப்பா, முதலில், சரளிவரிசை, ஜன்டெவரிசை எல்லாம் ஆகவேணுமப்பா.

**சங்.** அப்பறம் தான் பல்லவி வரிசை வருமோ?

**சன்.** அதற்கப்புரம் ராகம் கடைசியிலே பல்லவி.

**சங்.** முன்னே கொஞ்சம் ராகமும் பல்லவியும் கத்துகொடுங்களேன்.

**சன்.** அது வராதப்பா, இதற்குள்ளாக.

**சங்.** கொஞ்சம் பாருங்களேன், அல்லாம்வரும்.

**சன்.** சரி, உன் இஷ்டம்—இப்பொழுது கொஞ்சம் பசியாயிருக்குது சாப்பாட்டுக்கு மேலே ஆகட்டும் அப்புறம் ஆரம்பிக்கலாம்.

**சங்.** சாவேரி! சமயலாச்சோ?

**சன்.** உன் பெண்சாதி பெயர் என்ன சாவேரியா?

**சங்.** இல்லெ அவபேரு காவேரி இந்த ராஜா எல்லாப் பெயரையும் சங்கீதமா மாத்திகணும் இண்ணு உத்தரவு போட்ட போது, அத்தெ சாவேரி இண்ணு மாத்திவிட்டேன்.

**காவேரி வருகிருள்.**

**கா.** ஏன் கூப்பிட்டைங்க?

**சங்.** சமயலாச்சோ?

**கா.** இதுக்குள்ள என்னமா ஆவும்? வாதாபிகணபதி பச்சடியாச்சி; புந்நாகவராளி பொரியலாச்சி, கல்யாணிக்கா வேகுது, அத்தெ கொழம்புபண்ணி வுட்டு, அப்பறம் சாப்புதாளம் வரக்கணும்.

**சன்.** இதென்னடாப்பா இது! ஒன்றும் அர்த்தமாகவில்லே.

**சங்.** எல்லாம் இந்த ஊரு ராஜா வேலெ! எல்லாபேரையும் மாத்திவுட்டாரு! வாதாபிகணபதி பச்சடி இண்ணு—

வாழக்கா பச்சடி இண்ணு அர்த்தம்—புந்நாகவராளி பொரியல்—பொடலங்கா பொரியல்—கல்யாணிக்கா இண்ணு கல்யாணிப் பூசணிக்கா.

**சன்.** சாப்பு தாளம் என்ருல்?

**சங்.** சோத்தப்பளம்!—உம்—அடி, இவருக்கு பசியாயிருக்கு தாம்—சீக்கிரம் சமயலெமுடி. [காவேரி உள்ளேபோகிருள்]

**சன்.** ஆனல், அதுவரைக்கும் கொஞ்சம் ராகம் பாடி ஒரு பல்லவி பாடுகிறேன் கேள் தோம்தர னு ...

[பாடுகிருர்]

**சங்.** கொஞ்சம் பொறுங்க— இதையெல்லாம் எழுதுகிறேன்.

**சன்.** இதையெல்லாம் எழுதிக்கொள்ள முடியாதப்பா, மனசுலெ பதிய வைத்துக் கொள்ள வேண்டும்.

**சங்.** இல்லே சாமி—நானு எழுதுகிறேன்.

[சன்யாசி பாட, சங்கரன் எழுதுகிருன்.]

**சன்.** [ராகம் பாடி முடிந்ததும்] அப்பா, என்ன எழுதிக் கொண்டாய்? படி கேட்போம்.

**சங்.** [படிக்கிருன்] தோம்புதெரே—நாயினு—நாயினு நாய் நரி—நாய் நரி

**காவேரி உள்ளிருந்து வருகிருள்.**

**கா.** இதென்ன இது? நாயும் நரியும்—நல்ல பாட்டுதான்! வேறே என்னமானலும் நல்ல பாட்டா கத்துக்குங்க.

**சங்.** அப்படித்தான் செய்யுங்க சாமி—எம்பொண்டாட்டி கோவிச்சிகரா.

**சன்.** அதெல்லாம் வராதே—பல்லவி வராதப்பா இதற்குள்ளாக—.

**சங்.** நீங்க கத்து குடுத்துதாம் பாருங்களேன்.

[காவேரி உள்ளே போகிருள்.]

**சன்.** ஆகட்டுமப்பா. [கல்யாணி ராகத்தில் பல்லவி பாடுகிருர்.]
முருகையனே! பன்னிருகையனே

அப்பா தொண்டை வறண்டு போச்சுது-கொஞ்சம் தாகத்திற்கு வெந்நீர் கொண்டுவா,

**சங்.** வேண்டாம் சாமி, வெந்நீரு சாப்பிட்டா அப்புறம் சாப்பாடு கொள்ளாது! — கொஞ்சம் வெத்திலெ வேணுமிண்ணு போட்டுங்க—

[வெற்றிலைப் பெட்டியைத் திறந்து]

இந்தாங்க — இந்த கொட்டெ பாக்கை போட்டுக் கொண்டு, கொஞ்சம் கடிங்க—இதொ வெத்திலெ— நான் பாடரேன்—கொஞ்சம் கேளுங்க— [பாடுகிறுன்.]

முருக்கு—கையனே! பன்னீரு கையிலே—

[சன்யாசி பாக்கை வாயில் போட்டுக்கொண்டு சிரிக்கிறுர், தொண்டை அடைத்துக்கொண்டு மூர்ச்சையாகிறுர்.]

ஐஐயோ!—சாமி!—சாமி!—சாவேரி! சாவேரி-ஓடிவா!

**காவேரி அம்மாள் உள்ளிருந்து வருகிறுள்.**

**கா.** என்ன! என்ன!

**சங்.** சாமியாருக்கு கொட்டெபாக்கு கொடுத்தேன்! அது மார்லே அடைச்சிகிணுப்போலே இருக்குது! அப்படியே உழுந்துட்டார்டி! என்ன செய்யரதடி ?

**கா.** நான் சொல்ரபடி கேளுங்க!—அப்படி என்னமாணலு — ஆனு — அப்பறம் நம்ப பேர்லே பழி வரும். அப்படியே எடுத்தும்போயி எதிர் ஊட்டு திண்ணேயிலெ வளத்தி உடுங்க!

**சங்.** ஆமாம், அதுதான் நல்லயுக்தி—நீ போயி தெருவுலெ யாரும் இல்லாத சமயம் பாத்து, கையெ தட்டு— நானு அப்படியே தூக்கிகினு போயி, எதிர் வூட்டிலெ வைச்சூடரேன் இவரே — இல்லாபோனு இவரெ கொண்ணூட்டோம் இண்ணு நம்பபேர்லே பழி வரும்! போதாக் குறைக்கு இந்த சாமியாரு—சங்கீத வித்வான்!—ராஜாவுக்கு தெரிஞ்சா ரெண்டு பேருக்கும் கண்டம் தான்—நீ போயி வெளியிலே பாரு.

[காவேரி வெளியே போய் வருகிறுள்.]

**கா.** இந்தாங்க! — தெருவுலெ யாருமில்லே — எதிர்வூட்டு கதவு சாத்தியிருக்குது, அந்த கதவும் பேர்லெ சாத்தி வைச்சூடுங்க! பழி அவங்க பேர்லெ விழும்,

**சங்.** ஆமாமாம்! நல்லயுக்தி!

**காட்சி முடிகிறது.**

## மூன்ரும் காட்சி

இடம்—பரசுராமன் வீட்டின் உள்புறம்.

தெருக்கதவு உள் தாப்பாள் இடப்பட் டிருக்கிறது. ஒருபுறமாக பரசுராமன் உட்கார்ந்து சரஸ்வதி படத்திற்குப் பூஜை செய்து கொண்டிருக்கிருன். காந்தாரி உள் அறையில் சமையல் செய்கிருள்.

**பர.** அடி — காந்தாரி!—உம்—தேவகாந்தாரி?

**காந்.** [அறையிலிருந்து வருகிருள்] ஏன்! கூப்பிட்டைங்களே.

**பர.** சமய லாச்சோ?

**காந்.** இதோ ஆயிபோச்சி—ஒரு நொடியிலே—பூஜெ பண்ணும் போதுகூட சாப்பாட்டு கியாபகம் தானு!

**பர.** இல்லெடி, ரொம்ப பசியாயிருக்குது.

**காந்.** பூஜெ பண்ணும்போது மனசெ அடக்கவாணுமா!— ஏதாவது ஸ்தோத்திரமா பாடிகினு பூஜபண்ணு— சரியாபோவும்.

**பர.** ஸ்தோத்திரப்பாட்டு தமிழ்லே எனக்கு ஒண்ணும் தெரியாதே.

**காந்.** ஒன்ணுமா தெரியாது? ஏதாவது தெரிஞ்சபாட்டா பாடுங்களேன்—சாதத்தெ வடிச்சூட்டு வர்ரேன்.
[உள்ளே போகிருள்.]

**பர.** என்னடா கஷ்டமாயிருக்குது! எனக்கென்ணு தமிழ் பாட்டு தெரியும்? ஒண்ணுதான் கியாபகம் இருக்குது.
[பாடுகிருர்]

ஓதாமல் ஒருநாளும் இருக்க வேண்டாம்
ஒருவரையும் பொல்லாங்கு சொல்ல வேண்டாம்
—என் அம்மணி தாயே! சரஸ்வதி!
மாதாவை ஒருநாளும் மறக்கவேண்டாம்
வஞ்சனைகள் செய்வாரோ டிணங்கவேண்டாம்
[தவடையில் போட்டுக்கொண்டு]

—பூலோக சுந்தரி! கைலாசவாசி!

**காந்.** [மறுபடியும் உள்ளிருந்துவந்து] இது என்ன பாட்டு இது! போதும் நிறுத்துங்க! யாராவதுபாத்தா சிரிக்கப் போரா!—அதோ! ஏதோ கதவண்டை சத்தம் கேட்டுது, என்னண்ணு பாருங்க.

**பர.** [கதவண்டைபோய் மெல்ல கொஞ்சம் திறந்து பார்த்து] அடி அடி நம்ப பாட்டு வாத்தியார் வந்திருக்கிருரடி! [கதவை நன்ருய்த் திறக்க, சன்யாசியின் உடல் வீட்டிற்குள் விழுகிறது.]

**காந்.** ஐ ஐ யோ! இதென்ன கீழே விழுந்தூட்டாரே!

**பர.** ஆமாண்டி! ஆமாண்டி!—என்ன செத்துப்பூட்டாரா என்ன! மூச்சிகீச்சி ஒண்ணேயும் காணுமே!—அடி தேவகாந்தாரி! நம்ப என்ன செய்யரது?

**காந்.** எனக்கென்னமோ சந்தேகமாயிருக்குது — நானு ஒரு யுத்தி சொல்ரேன் அதும்படி செய்யுங்க—எதிர் வூட்டிலெ போய்—அவா புருஷன் பெண்சாதியெ எதாவது சாக்கு சொல்லி ரெண்டாங்கட்டுக்கு—அழைச்சிகினுபோயி பேசிகினு இருக்கரேன், அந்த சமயம்—இத்தெ தூக்கிகினு வந்து, மொதல் கட்டிலே மறவா வைச்சூடுங்க. நம்பொமேலே பழியிருக்காது.

**பர.** அப்படியே ஆவட்டும்—அதோ அவுங்க கதவு தெறந்திருக்குது—நீ முன்னேபோ. [காந்தாரி போகிருள்.]

**காட்சி முடிகிறது.**

---

## நான்காம் காட்சி

**இடம்**—*சங்கரன் வீட்டில் கூடம்.*

**பரசுராமன்** *தெருக் கதவைத் திறந்துகொண்டு உள்ளே தலையை நுழைத்துப் பார்க்கிருன்.*

**பர.** யாரையும் காணும் அந்த மட்டும்! அவுங்களெ ரெண்டாம் கட்டுக்கு அழைச்சிகினு போயிருக்கரா—இதான் சமயம்—

[உடலைக் கொண்டுவந்து அங்கு மூலையில் இருக்கும் நாற்காலியின் பேரில் உட்காரவைத்து ஒரு போர்வையால் மூடிவிட்டு வெளியே ஓடிப்போய் விடுகிருன்.)

*இரண்டாங்கட்டிலிருந்து* **சங்கரனும், காவேரியும், காந்தாரியும்** *வருகிருர்கள்.*

**காவே.** அதுதாம்மா வழி, ரகசியமா—யாருக்கும் தெரியாமெ—செய்தூடச் சொல்லு-இல்லாப்போனு நம்பபேர்லெ பழிவரும்.

**காந்.** அப்படியே ஆகட்டும். (விரைந்து வெளியே போகிருள்.)

**சங்.** சாவேரி, தெருக் கதவெ சாத்திக்கோ—இல்லாப் போனு நம்ப யுக்தியெ நம்பளுக்கே காட்டப்போ ராங்க!—நம்ப இல்லாதபோது நம்ப ஊட்லெ கொண் டாந்து போட்டாங்கண்ணு என்னு செய்யரது!

[காவேரி தெருக் கதவைத் தாளிடுகிருள்.]

கொண்டா சாப்பாட்டே—பசி யெடுக்குது.

[காவேரி உள்ளே போய் இலையைக் கொண்டு வருகிருள்.]

**சங்.** இந்த போர்வையை நாற்காலி பேர்லெ யார் போட் டது? அந்த முட்டும் நம்ப பழியே கழிச்சிகனமே!

[மூலக்குப்போய் போர்வையை எடுக்க சன்யாசி உடலைக் கண்டு]

இல்லேடி! இந்த பழி நம்ப ஊட்டுக்கு மறுபடியும் வந்துட்டுதடி!

**கா.** ஐயோ! கெட்டேனே! நம்போ சொல்லரத்துக்கு முன் னேயே இந்த யுக்தி செய்திருக்கராங்க!

**சங்.** ஆமாண்டி! ஆமாண்டி! ஏதோ நம்மெ ரகசியமா கேக் கரது போலெ, அவ ரெண்டாங்கட்டுக்கு நம்மெ அழைச்சிகினு போயிருந்தபோது, அவபுருஷென் இங்கெ கொண்டாந்து இத்தெ வைச்சிட்டுப் போயி ருக்கரான்! — இருக்கட்டும் சொல்றேன் — சாயங்கால மாயிபோச்சி—கொஞ்சம் இருட்டட்டும் சொல்ரேன் —ஒரு கவுத்தெகட்டி, அவுங்க ஊட்டுக் கூரெயின் பேர்லெ ஏறி வாசல் வழியா எறக்கிவுடரே இத்தெ!

**காட்சி முடிகிறது**

---

## ஐந்தாம் காட்சி

**இடம்**—*பரசுராமன் வீட்டின் வாசல்;* **பரசுராமனும், காந்தாரியும்** *சப்பிட்டுக் கொண்டிருக்கின்றனர்.*

**பர.** நம்போ யுக்தி பண்ணு—அதுக்குமேலெ யுக்தி பண் ணப் பார்க்கராங்க!

**காந்.** அவுங்களுக்கு மேலெ நம்பளுக்கு யுக்தி பண்ண தெரி யாதா என்னு! சீக்கிரம் சாப்டுட்டு—படுத்துக் கொள் ளலாம்—

[சாப்பிடுகின்றனர். இருவர் மத்தியில் சன்யாசியின் உடல் வாயில் வழியாக இறங்குகிறது.]

**இருவரும்.** ஐயோ! பிசாசி! பிசாசி! [எழுந்து ஓடுகிறார்கள்.]

**பர.** [மெல்ல திரும்பி வந்து] இல்லெடி! நம்ப பழய ஆசாமி! திரும்பி வந்திருக்கராரு!—ஓ! கவுத்திலே கட்டி, வாசல் வழியா எறக்கி யிருக்கராங்க — கொஞ்சம் பொறு! அவுங்க யுக்தியெ அவுங்களுக்கே காட்டரேன்!— அவுங்க இந்த வெய்ய காலத்திலெ, வாசல்லெ தான் படுத்துகினு தூங்கர வழக்கம்!—நடுராத்திரி யாகட்டும் சொல்ரேன்!

**காட்சி முடிகிறது.**

---

## ஆறும் காட்சி

**காலம்**—விடியற்காலம். **இடம்**—சங்கரன் வீட்டின் வாசல்.

ஒருபக்கம் கிணற்றின்மீது ராட்டினம் போட்டிருக்கிறது. வாசவில் **சங்கரனும், காவேரியும்** படுத்துக்கொண்டிருக்கின்றனர். கூரையிலிருந்து, கிணற்றின் ராட்டினத்தின் வழியாக **பரசுராமன்** சன்யாசியின் உடலைத் தூக்கிக்கொண்டு இறங்கி, இருவர் மத்தியிலும் வளர்த்திவிட்டு, கொடியிலிருந்த சால்வை யொன்றைப் போர்த்திவிட்டு, வந்த வழியே ஏறிப்போய் விடுகிறான்.

**சங்.** [கொஞ்சம் பொறுத்து விழித்து] அடி! அடி!—காலமே எழுந்து சீக்கிரம் சமயலாகணுமிண்ணேனே—எழுந்திரு—ஏண்டி! இந்த சரிகெ சால்வையயா போத்துகினு படுத்துகினே!

**கா.** ஏ!—நாணு சால்வையே போத்துகினு படுத்துகினேன்! நீங்க போத்துகினு—[அதை இருவருமாக இழுக்க சன்யாசியின் உடலைக் காண்கிறார்கள்.]

**சங். கா.** ஆ! ஆ! [அலறி எழுந்திருக்கின்றனர்.]

**சங்.** என்னுடா! எழவா போச்சி! இந்த சனி நம்மெ விடாது போலிருக்குதே?

**கா.** இது என்னமா வந்து சேர்ந்தது நம்ப வூட்டுக்கு மறுபடியும்?

**சங்.** நம்பளவங்க வேலெயாதான் இருக்கணும் — இரு சொல்லரேன், பொழுது நண்ணு விடியரத்துக்குள்ளோ—இத்தெ கொண்டுபோய் அவன் திண்ணையிலெ வளர்த்தி விடரேன்! கதவெ தெற!—

[எடுத்துக்கொண்டு வெளியே போகிறான்.]

**காட்சி முடிகிறது.**

## ஏழாம் காட்சி

**இடம்**—இருவர் வீட்டிற்கும் இடையிலுள்ள முட்டுச் சந்து.
**காலம்**—விடியற்காலம்.

தன் வீட்டின் கதவைத் திறந்துகொண்டு **சங்கரன்** சன்யாசி உடலுடன் ஓடிவருகிறான். திண்ணையிலிருந்து **பரசுராமன்** எழுந்திருந்து ஓடிவந்து அவனைத் தடுக்கிறான்.

**பர.** பொறுங்க! பொறுங்க! எங்கே தூக்கிக்கினு வர்ரைங்க இத்தே!—நீங்க வருவைங்க இண்ணு எனக்குத் தெரிஞ்சிதான் திண்ணையிலே காத்துக்கினு இருந்தேன் தூங்காதே!

**சங்.** ஏண்டா பயலே! நீ இந்த சங்யாசியே கொண்ணூட்டு எம்பேர்லே பழியே போடப் பாக்கிறையோ?

**பர.** அந்தக் கதையெல்லாம் ஓதவாது!—நீங்க பெரியவனிண்ணு உங்க வரைக்கும் இருக்கட்டும் — நீங்க கொண்ணூட்டு எம்பேர்லே பழியே போடப்பாக்கிறைங்களா!—எடுத்தும் போங்க உங்க வீட்டுக்கு இத்தே!

**சங்.** நீ எடுத்தும் போ உன் வீட்டுக்கு இத்தே!

[இருவரும் மன்ருடுகிருர்கள்.]

சற்று தூரத்தில் **கொத்தவால்** வருகிறன்.

**கொ.** என்னடாப்பா சந்துலே கெலாட்டா?

**காந்தாரியும், காவேரியும்** தங்கள் தங்கள் வீட்டிற்குள்ளிருந்து ஓடி வருகிருர்கள்.

**காந். கா.** கொத்தவால்! கொத்தவால்!

[இருவரும் தங்கள் தங்கள் கணவரைப் பற்றி இழுக்க சங்யாசியின் உடல் கீழே விழுகிறது.]

**பர.** ஐயா! கொத்தவால்! அவர்தான் கொண்ணுரு சன்யாசியே.

**சங்.** இல்லெ! நானல்லா, இவன்தான் கொண்ணுன்.

**கொ.** சங்கீதம்! சங்கீதம்! [இருவரையும் பிடித்துக்கொண்டு]

[பாடுகிருன்] **ராகம்—பூபாளம்—தாளம்—ரூபகம்**

சங்கீதம் சங்கீதம்—சமாசாரத்தை
சங்கீதமாய்ச் சொல்லுங்கள்.

**சங்.** அடெபோயா! இப்பொகூடவா பாட்டு! அவன் கொண்ணூட்டு பழியெ எம் பேர்லே போடப் பார்க்கரான்!

**பர.** அவர் கொண்ணூட்டு எம்பேர்லே பழி போடப் பாக்கராரு!

**கொ.** [பாடுகிருர்] ஹோ! அப்படியா வியாஜ்ஜியம்!
நீங்களிருவரும் சாட்சியம்! [ஸ்திரீகளுக்கு]
மன்னிப்புக் கிடையாது பூஜ்யம்!

வாங்க எல்லோரும் ராஜ சபைக்கு — தூக்குங்கடா உடலே.

**சங்.** நான் மாட்டேன் ஐயா! அவன்தான் கொண்ணுன்! அவனெ தூக்கச் சொல்லுங்க.

**பர.** நான் மாட்டேன், அவர்தான் கொண்ணுரு! அவரெ! தூக்கச் சொல்லுங்க.

**கொ.** சரி! நான் தூக்கிக்கினு வர்ரேன்! உங்கபேர்லே மூணு வியாஜ்யம் — மொதல்லே தெருவிலே பாடாமேயே சும்மா பேசனது! ரெண்டாவது, கலாடா பண்ணினது! மூணுவது, சன்யாசியே கொண்ணது!

[பாடிக்கொண்டே போகிருன்.]

**ராகம்—கேதாரம்—தாளம்—ஆதி**

**பல்லவி**

எல்லோரும் வாருங்கள்—
வியாஜ்ய மிருக்குது பாருங்கள்
எல்லோரும் பாருங்கள்

[போகின்றனர்.]

**காட்சி முடிகிறது.**

# மூன்றும் அங்கம்

## முதற் காட்சி

**இடம்—வசந்தராயர் கொலு மண்டபம். காலம்—காலை.**

*மந்திரி முதலியோர் வீற்றிருக்கின்றனர். கொத்தவால், சங்கரனையும், பரசுராமனையும் கைதியாகப் பிடித்துக் கொண்டு நிற்கிறான். பரிவாரங்கள் சூழ்ந்திருக்கின்றனர். காவேரியும், காந்தாரியும் ஒரு புறம் நிற்கின்றனர்.*

**கட்டியக்காரன்.** [பாடுகிறான்.]

**ராகம்—வசந்தா—தாளம்—ஆதி**

**பல்லவி**

*வசந்தராயர் வருகிறார்*
*வசந்தராக ராயர் இதோ கொலுவிற்கு* (வ)

**அனுபல்லவி**

*இசைந்தமனத்துடன் எல்லோரையும் காத்திடும்*
*திசைகள் புழ்ந்திடும் தேவர்கள் போற்றிடும்* (வ)

**வசந்தராயர்** *பரிவாரங்களுடன் வந்து கொலுவில் அமர்கிறார்.*

**வ.** [பாடுகிறார்.]

**ராகம்—சங்கராபரணம்—தாளம்—ரூபகம்**

*மண்டலம் எங்கும் புகழும் மந்திரியே கூறும் நீரும்*
*தண்டனை விதிக்கவேண்டிய தகராறுண்டோ பாரும்.*

**ம.** *மகாராஜா! தாங்கள் தீர்மானிக்கவேண்டிய வியவகாரம் இன்று ஒன்று உண்டு.*

[கானடா ராகத்தில் பாடுகிறார்.]

*உள்ளபடி உரைத்திடுவாய் உத்தமனுன கொத்த*
[வாலே
*கள்ளமொன்றின்றியே நடந்ததை நீதான் இன்றே.*

**கொ.** *அரசே!* [கேதார கௌளத்தில் பாடுகிறார்.]
*கொலைதனைச் செய்தனர் கொடும்பாவியர் இருவருமே*
*குலை நடுங்கிடவே கொன்றார் சன்யாசியைத் தெரு*
[வினிலே

**வ.** [அடாணு ராகத்தில் பாடுகிறார்.] *ஆஹா! அப்படியா சமாசாரம்!*

*ஓஹோ! இதென்ன கிரஹசாரம்!*
*—பாபிகளே! என்ன சொல்கிறீர்கள் ?*

சங். மஹாராஜா!—பாரினில் நானிந்தப் பாபம் செய்தறியேனிக் காரியம் செய்த துரோகி உம்முன் நிற்கின்ருனே.

பர. தானே செய்துவிட்டு அனியாயமாய் மன்ஞ என்மேல் நானே செய்ததாக நாட்டுகின்ருர் இப்பெரும் பழியை.

வ. ஆனுல்—[பாடுகிருர்.]

**ராகம்—பிலஹரி—தாளம்—ரூபகம்**

**பல்லவி**

தண்டனே விதிக்கிறேன்
தப்பாமல் இருவர்க்கும்—நான்

**அனுபல்லவி**

கண்டனம் செய்யா விட்டால்
கர்மம் எனேச் சாரும்!

[முதலில் ஒவ்வொருவராய், பிறகு எல்லோரும் ஒன்ருக கீழ்க்கண்ட பாட்டுகளேப் பாடுகின்றனர்.]

ம. **ராகம்—நளினகாந்தி—தாளம்—ஆதி**

**பல்லவி**

சந்தோஷம்—மகாராஜா மிக
சந்தோஷம் மகாராஜா.

**அனுபல்லவி**

சன்யாசியைக் கொன்ற பாபம்
சாற்றிடப் போமோ புவியில்.

சங். **ராகம்—முகாரி—தாளம்—ஆதி**

**பல்லவி**

ஒரு பாபமு மறியா என்னே
தண்டிப் பீராயின் உம்மை

**அனுபல்லவி**

பெரும் பாவம் சூழ்ந்திடும்
பின்னும் யோசிப்பீரே.

பர. ராகம்—சஹானா—தாளம்—ரூபகம்

பல்லவி

கொன்றவன் அவனிருக்க
கொடுங்கோல் மன்னா நீரும்

அனுபல்லவி

இன்றென்னை தண்டிப்பீரேல்
இன்னலுமக்கு வருந்தானே

காவே. ராகம் — நாதநாமக்கிரியை—தாளம்—ரூபகம்

பல்லவி

மாங்கல்ய பிச்சை தாரும்
மன்னனே என்னைக் காரும்

அனுபல்லவி

இங்கிவரைக் கொல்வீரானல்
என் கதி என்னாகும்.

காந். ராகம்—எதுகுலகாம்போதி—தாளம்—சாப்பு

பல்லவி

கணவனைப் பிரிந்தே நான்
கணமேனும் வாழேனே

அனுபல்லவி

பிணமதாய்ப் போனாலும்
பெறுவேன் நான் சுவர்க்கத்திலே

கொ. [பியாகடையில் பாடுகிறன்.]

பாட்டைத் தப்பாகப் பாடுகிறர்
பாதகர்கள் இவர்களே
நாட்டைவிட் டிவர்களை
நானே துரத்த வேண்டும்.

[இக் கூச்சலில் சன்யாசியின் வாயினின்றும் இருமல் சத்தம் கேட்கிறது. பிறகு சன்யாசி எழுந் திருந்து வாயினின்றும் ஒரு கொட்டை பாக்கை உமிழ்கிறர். எல்லோரும் ஆச்சரியப்பட்டு திகைத்து நிற்கின்றனர்.]

**வ.** ஆஹா!—ஸ்வாமி பிழைத்தீர்களே!—நீங்கள் தேவ லோகம் போய் விட்டீர்களென்று அல்லவோ நினைத்தோம்!

**சன்.** ஆம், அங்குதான் போய்ச் சேர்ந்தேன் — சற்று முன்பாக.

**வ.** அங்கே!—என் தாயாரைக் கண்டீர்களோ ?

**சன்.** கண்டேன்.

**வ.** அவர்கள் எனக்கு ஏதாவது சொல்லி யனுப்பினார்களோ ?

**சன்.** அதைக் கூறத்தான் திரும்பி வந்தேன்—அவர்கள் இவ்வூரில் சிலகாலமாக பாடப்படும் அபஸ்வரமான ராகங்களையும், காலமில்லாத தாளங்களையும் கேட்டு, சில தினங்களாக தனக்கு தலைவலி உண்டானதாகவும், நித்திரையே யில்லா திருப்பதாயும், தெரிவிக்கச் சொன்னார்கள்; ஆகவே உடனே இந்த சங்கீதத்தை யெல்லாம் நிறுத்திவிடும்படியாக கட்டளையிடும்படி யாகவும் சொன்னார்கள்.

**வ.** ஸ்வாமி!—அவர்கள் உத்திரவுபடியே!—மந்திரி! இனி நம்மூரில் ஒருவரும் பாடவேண்டியதில்லை யென்று உத்திரவிடு.

**ம.** சந்தோஷம்—கொத்தவால், இனி நம்மூரிலுள்ள ஒருவரும் பாட வேண்டியதில்லை.

**கொ.** ஐயா! நீங்கள் எல்லோரும் இனி பாடவேண்டியதில்லை.

**சங். பர.** அப்பா! — நாம் இனி ஒருவரும் பாடவேண்டியதில்லை.

**கா. காங்.** அம்மா!—இனி நாம் இந்தப்பாட்டைக் கேட்கவேண்டிய தில்லை!

**பரிவாரங்கள்.** அப்பா! ஒழிந்தது இந்த சங்கீதத் தொல்லை!

**வ.** ஆயினும் மங்களம் மாத்திரம் பாடுவோம்.

[பாடுகின்றனர்.]

**காட்சி முடிகிறது.**

—o—

**நாடகம் முற்றிற்று.**